
வாசகர்களுக்கு
நோன்புப் பெருநாள்
வாழ்த்துக்கள்...

ஈத் முபாரக்!

# AHARAM அகரம்

தரம் 5 - 11 வரை | எண்: 10 எழுத்து: 07 ஜூலை - 2016 | www.aharam.lk



# முஹம்மத் அலி:
## வெள்ளைத் தேசத்தை வெற்றி கொண்ட கறுப்பு வீரர்

Des: Deltota Harees

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவனல்லையில் 22 வருட வெற்றிப் பாதையில் பல நூற்றுக்கனக்கான மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய பெறுமையுடன் ஆரம்பமாகின்றது **NEWMAN'S COLLEGE** இன்

# A/L 2018 கலை, வர்த்தகப் பிரிவு வகுப்புக்கள்

| | |
|---|---|
| கணக்கீடு | Mr. T.M. Shafy B.Com, HNDA |
| வணிகக் கல்வி | Mr. T.M. Shafy B.Com, HNDA |
| பொருளியல் | Mr. S.H.M. Nawfal B.Com, Spc |
| அரசியல் | Mr. M.S.M. Jifry B.A, Dip in Edu. |
| தமிழ் | Mr. R. Yasandan B.A, Spc Tamil Trd. |
| புவியியல் | Mr. M.S.M. Nawfar B.A (Hon) M.A. |
| இஸ்~நாகரீகம் | Mr. Mou. M.S.M. Naalim B.A (Spc) |
| இஸ்லாம் | Mr. A.K.M. Fasloon B.A, Naleemi |
| Hard Tech | Mr. Aswath Khan M.Sc, PGD in Sci Edu. |

இலங்கையில் கல்வித்தராம் அதிகரித்திருப்பதால் அதற்கான போட்டியும் அதிகரித்துள்ளது. எனவே பல்கலைக்கழக தெரிவிற்கு அதிகபுள்ளிகளை பெறவேண்டும், என்பதால் ஆரம்பத்தில் இருந்தே நீங்களும் முயற்சி செய்யுங்கள்.

கடந்த பல வருடங்கலாக அனேக மாணவர்களின் A சித்திகளுக்கு வழிகாட்டிய ஆசிரியர்கள்

# English Medium Arts & Commerce

| | |
|---|---|
| Accounting | MR. FAHIM ZAWAHIR B.COM, SPC |
| Bus. Studies | MR. FEROSE MAHROOF B. Com, Sp (Hon) M.BA |
| Economics | MR. FEROSE MAHROOF B. Com, Sp (Hon) M.BA |
| English. Lit | Prof. ARASANAYAGAM |
| Geography | MR. E.M. WEERAKOON B.A (Hon),M.A. |
| I.C.T. | MR. DUMINDA DISSANAYAKA Bit, Spc ICT Trd. |
| Arabic | Mou. M.S.M. Naalim B.A. (Spc) M.A. |

*Don't miss this golden opportunity to face the examination*


*Join our well recognized and reliable institution*

NEWMAN'S COLLEGE MAWANELLA - SRI LANKA 21" NMC

# NEWMAN'S COLLEGE

MAWANELLA : 035 4926496

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"மனிதன் மட்டுமன்றி உயிர்ப் பிராணிகளும் கூட இரவின் ஆரம்பத்தில் தமது வசிப்பிடங்களை நோக்கிச் சென்று உறங்கி இளைப்பாறுகின்றன. தாவரங்களும் இரவில் ஓய்வெடுக்கின்றன. விதிவிலக்கான சில பிராணிகள்தான் இரவில் உணவு தேடி வெளியே சஞ்சரிக்கின்றன. இரவை அல்லாஹ் மனிதனுக்கு இளைப்பாறும் விதமாக ஆக்கியுள்ளான்"**


AHARAM அகரம்

எண்: 10 - ஜுலை : 2016 - எழுத்து: 07






பிரதம ஆசிரியர்
**டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்**

**ஆலோசனைக் குழு**

**அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)**
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

**எம்.எச். எம். ஹஸன்** M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

**ஏ.ஆர்.எம். ஜிப்ரி** BEd, MEd
(அதிபர், களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை)

**அன்பு ஜவஹர்ஷா**
(ஓய்வு பெற்ற அதிபர்)


ஆசிரியர்
**எம். றிஸ்வி ஸுபைர்**

துணை ஆசிரியர்
**வ. முஹம்மத் நபீல்**

தளக் கோலம்
**எம்.ஐ.எம். ஹரீஸ்**



19




24



32



30



**பாடத்திட்டம்**

| | |
|---|---|
| புலமைப்பரிசில் | 40 |
| அரபு மொழி | 14 |
| வரலாறு | 38 |




36



**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 741 2561**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஆசிரியர்...

# ரமழானுக்குப் பின்...

அருள் மிகு ரமழான் எமக்கு நிறையப் பாடங்களையும் படிப்பினைகளையும் தந்துவிட்டுச் சென்றுள்ளது. அவற்றை எமது வாழ்வில் கடைப்பிடிக்கின்ற போதுதான் ரமழானை உண்மையாகப் பயன்படுத்தியவர்களாக நாம் கருதப்படுவோம். அந்தவகையில், மாணவர்களாகிய நாம் ரமழானுக்குப் பின்னர் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய ஓர் அம்சமாக ஓய்வும் ஆரோக்கியமும் காணப்படுகின்றன. இவை இரண்டும் அல்லாஹ் எமக்கு வழங்கியுள்ள மகத்துவமான அருட்கொடைகளாகும். பொதுவாக நம் சகோதரர்கள் குறிப்பாக, மாணவர்கள் இதனை மிகச் சரியாக உணர்ந்து பயன்படுத்தாத ஒரு நிலைமையை அவதானிக்க முடிகிறது.

இதனை பின்வரும் ஹதீஸ் எமக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றது:

ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

''இரு பெரும் அருட்கொடைகள் விடயத்தல் அதிகமான மனிதர்கள் சுகயீனமாக நடந்து கொள்கின்றனர். அவை ஆரோக்கியம், ஓய்வு ஆகிய இரண்டுமாகும்.'' (அல்புகாரி)

யதார்த்தத்தில் மாணவப் பருவம் என்பது இவ்விரு பெரும் (ஆரோக்கியம், ஓய்வு) அருட்கொடைகளும் நிரப்பமாகக் கிடைக்கின்ற காலமாகும். இது விடயத்தில் அக்கறை செலுத்தி, அவற்றைப் பயன்படுத்துவதற்கூடாக மாணவப் பருவத்தை வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள முடியும்.

ஆரோக்கியம் என்பது வெறுமனே உடல் ஆரோக்கியம் மட்டுமல்ல. மாற்றமாக, உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருப்பதைத்தான் இறைத் தூதரின் மணிமொழி குறிப்பிடுகின்றது. உடல், உள ஆரோக்கியத்தின் அருமை, பெருமைகளை அதை இழந்த மனிதர்களிடம் கேட்டுப் பார்த்தால் அறிந்து கொள்ள முடியும். இல்லை, சற்று அவர்களை அவதானித்தாலே போதுமானதாகும். ஆரோக்கியமான காலத்தை முறையாகப் பயன்படுத்தாது, பொறுப்பற்ற நிலையில் காலத்தைக் கடத்திவிட்டு, இறுதி நேரத்தில் விழித்துக் கொள்வது எத்தகைய பயனையும் உலகிலும் தரமட்டாது; மறுமையிலும் தரமாட்டாது.

ஓய்வு மற்றுமொரு நிறைவான அருளாகும். மாணவப் பருவத்தில் இது வெகுவாக மாணவர்களால் உணரப்படுவதாகத் தெரியவில்லை. ஓய்வு என்பதை மாணவர்கள் பிழையாக விளங்கி, அதனை வீணடிக்கிறார்கள். உண்மையில், தன் மீது நியாயமாக சுமத்தப்பட்டிருக்கின்ற கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றிலிருந்தும் அழுத்தங்களிலிருந்தும் ஒருவர் விடுபடுவதையே ஓய்வு என்பது குறிக்கும். மாணவப் பருவம் தாண்டி வாழ்க்கைப் பயணம் தொடர்கின்றபோது இத்தகைய சந்தர்ப்பங்கள் மிக மிக அரிதாகவும் சிலபோது 'இல்லை' எனக் குறிப்பிடுமளவுக்கு வாழ்வு சோலிகளால் (Busy) நிறைந்து விடும்.

மாணவப் பருவத்தில் மிக அதிகமாகக் கிடைக்கின்ற ஓய்வை வீணடிக்காது பயன்படுத்திக் கொள்வதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூற்கள் என்பவற்றை வாசித்தல், கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற ஆக்கங்கள் எழுதுதல், முத்திரை சேகரித்தல், வீட்டுத் தோட்டம் செய்தல், இனபந்து உறவைப் பேணும் வகையில் உறவுகளை சுகநலம் விசாரித்தல், அல்குர்ஆன், அல்ஹதீஸ் வசனங்களை மனனம் செய்தல், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் பயனுள்ள விளையாட்டுக்காக கிடைக்கும் ஓய்வில் ஒரு பகுதியை செலவிடுதல் எனப் பல்வேறு பயனுள்ள விடயங்களுக்காக எமது ஓய்வைப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் நாமும் பயன் பெற்று சமூகமும் பயன் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது வருடம் முழுவதும் நோன்பு நோற்பது போன்றாகும்." (புஹாரி, முஸ்லிம்)

அன்பின் சிறார்களே! புனிதமிகு ரமழான் மாதம் பல்வேறு சிறப்புக்களை தன்னகத்தே பொதிந்துள்ள மாதம். அது அல்லாஹ் தன் அடியார்களுக்கு நன்மைகளை பன்மடங்குகளாக அதிகரித்து வாரி வழங்கும் ஒரு மாதம்.

ரமழான் மாதத்தின் சிறப்புக்களை அறிந்த நாம் அம்மாதத்தில் பல இபாதத்துக்களில் எம்மால் முடிந்த வரை ஈடுபட்டு ரமழானின் அருள் மழையில் எல்லோரும் நனைந்தோம். இறை சிந்தனையோடும் பாவம் செய்யத் தயங்கும் உள்ளத்தோடும் ஓர் இனிய ஆன்மிகச் சூழலிலும் எம்மை நாம் முழுமையாக ஈடுபடுத்தி, ரய்யானை அடைந்து கொள்வதற்காய் பல பிரயத்தனங்களை மேற்கொண்டோம்.

சுவனம் இறையச்சம் உள்ளவருக்கே தயார்படுத்தப்பட்டுள்ளது என அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் உறுதியளித்துள்ளான். சுவனம் எனும் மாபெரும் வெற்றிக்கு அடித்தளமாய் அமைந்துள்ள இறையச்சத்தை உருவாக்கக் கூடிய மிகப் பெரும் அமலே நோன்பாகும்.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் மூலம் நபியவர்கள் ரமழானில் மாத்திரமல்லாது ஏனைய நாட்களிலும் நோன்பு நோற்று ஸஹாபாக்களையும் நோன்பு நோற்பதற்கு ஊக்கப்படுத்தியுள்ளார்கள். இங்கு நபியவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மூன்று நாட்கள் என்பது ஒவ்வொரு மாதத்தின் பிறை 13, 14, 15 வது நாட்களைக் குறிக்கும். அதனை 'அய்யாமுல் பீல்' என்று சொல்லப்படுகின்றது.

ரமழானில் பர்ளான நோன்பை நிறைவேற்றியது போல ரமழான் அல்லாத காலங்களில் நபியவர்கள் சுன்னத்தான நோன்புகளில் மிகவும் கரிசனை செலுத்தியுள்ளார்கள். வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய தினங்கள், முஹர்ரம் மாத ஒன்பதாம் பத்தாம் தினங்கள், அறபா தினம் மற்றும் ஷவ்வால் மாத நோன்பு... என இவற்றை வகைப்படுத்தலாம்.

இத்தகைய நோன்புகளை தமது உம்மத்தவர்களும் நோற்க வேண்டும் என விரும்பிய நபியவர்கள் இந்நோன்புகளுக்கான நன்மைகளாக வருடம் முழுவதும் நோன்பு நோற்ற நன்மை என்றும் சென்ற வருட, அடுத்த வருட சிறு பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்றும் உற்சாகப்படுத்தினார்கள்.

இவ்வாறு, நபியவர்கள் மக்களை உற்சாகப்படுத்திய காரணம் அடிக்கடி ஒரு மனிதன் நோன்பு நோற்கும்போது அவன் அல்லாஹ்வுடைய சிந்தனையுடனும் இறையச்சத்துடனும் தனது வாழ்க்கையை நகர்த்த வழியேற்படுகிறது. அத்தோடு, அவன் பாவங்களிலிருந்து விடுபட்டு தூயவனாக வாழும் சந்தர்ப்பத்தைப் பெறுகின்றான்.

மேலும், நபியவர்கள் குறித்துக் காட்டிய மேற்படி ஹதீஸின் மூலம் ஒரு மனிதன் ரமழான் மாதத்தில் மாத்திரம் அமல்கள் செய்யாது ரமழான் அல்லாத ஏனைய மாதங்களிலும் இபாதத் செய்ய வேண்டும் என்ற மற்றுமொரு விடயத்தையும் உணர்த்தி நிற்கின்றது.

நோன்பு நோற்பது, அல்குர்ஆன் திலாவத் செய்வது, நபிலான வணக்கங்களில் ஈடுபடுவது மற்றும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவது போன்ற விடயங்களை எம்மில் பலர் ரமழானோடு மாத்திரம் சுருக்கிக் கொள்கின்றனர். ஏனைய காலத்தில் இந்த விடயத்தில் பராமுகமாக இருந்து விடுகின்றனர்.

நபியவர்கள் கூறினார்கள்: ''அமல்களிலே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது குறைவாக இருப்பினும் தொடர்ச்சியாக செய்யப்படும் அமலே.'' (முஸ்லிம்)

மாணவர்களாகிய நாமும் அதிகமான நன்மைகளை அல்லாஹ்விடத்தில் எமக்கு பெற்றுத் தரக் கூடிய சுன்னத்தான நோன்புகளை நோற்பதற்கு முயற்சிப்போம். குறைந்தது மாதத்தின் நடுப்பகுதியான அய்யாமுல் பீல் நாட்களில் நோன்பிருந்து வருடம் பூராகவும் நோன்பிருந்த நன்மையை அடைந்து கொள்வோம்.


அதேபோன்று, எமது ஏனைய இபாதத்துக்கள் அனைத்தையும் ரமழானோடு மாத்திரம் சுருக்கிக் கொள்ளாது ரமழானைத் தொடர்ந்து வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக செய்வதன் மூலம் இறையச்சம் உள்ளவர்களாக மாறி மறுமையில் ரய்யானைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்பாட்டுச் சொற்றொடர்கள்



## பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

"எந்தவொரு செயலைச் செய்வதற்கு முன்னரும் 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' (அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு) என மொழிவது இஸ்லாம் கற்றுத் தந்துள்ள அழகிய வழிமுறையாகும். உதாரணமாக: ஆகாரம் அருந்த முன்னர் அல்லது ஒரு புத்தகத்தை வாசிக்க முன்னர் என பல்வேறு செயல்களைக் கூறலாம். செயல் ஒன்றை ஆரம்பிக்க முன்னர் இந்த துஆவை மொழிவது நபிவழி ஸுன்னா ஆகும். ஆரம்பிக்கும் செயல் இறைவனின் பொருத்தத்தைப் பெற்றிருக்க வேண்டும்."

## அல்ஹம்துலில்லாஹ்



"அல்ஹம்துலில்லாஹ் என்பதன் பொருள் 'எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே' என்பதாகும். இறை விசுவாசிகளின் நாவில் அதிகம் உச்சரிக்கப்படும் சொற்றொடர் இதுவாகும். அல்லாஹ் தன் மீது சொரிந்த அளவற்ற அருளின்பால் திருப்தி கொண்டவனாகவும் அதற்கு நன்றி செலுத்துமுகமாகவும் ஓர் இறை விசுவாசி ''அல்ஹம்துலில்லாஹ்'' என உளமார கூறுகின்றான். தும்மலின் பின்னர், நீர் அருந்திய பின்னர், செயலொன்றின் இறுதியில், நல்ல அமல் ஒன்று நிறைவேறிய பிற்பாடு போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் ஓர் இறை விசுவாசி ''அல்ஹம்துலில்லாஹ்'' என மொழிவது நபிவழி ஸுன்னா ஆகும்."

## இன்ஷா அல்லாஹ்

"இன்ஷா அல்லாஹ் என்பதன் பொருள் 'அல்லாஹ் நாடினால்' என்பதாகும். இறை விசுவாசிகள் ''நான் நாளை செய்வேன்'' என கூறுவதை அல்குர்ஆன் தடுத்துள்ளது. மாறாக, ''அல்லாஹ் நாடினால் நான் நாளை செய்வேன்'' என்றே கூறுமாறு பணிக்கிறது. இவ்வாறு ஒரு விசுவாசி கூறுவதன் மூலம் நாளை நடப்பவற்றை அல்லாஹ்வே நன்கறிபவன் என்பதை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறார் என்பது நிதர்சனம். தன் பெற்றோரை எகிப்துக்கு அழைக்கும் தருணத்தில் நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இன்ஷா அல்லாஹ் என சேர்த்து மொழிந்ததாக அல்குர்ஆன் கூறுகிறது."

## இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

"'நாம் அவனிடமிருந்தே வந்தோம், அவனிடமே மீளுவோம்' என்பது இதன் பொருளாகும். கெட்ட செய்திகளைச் செவியுறும்போது இச்சொற்றொடரை மொழிவது ஸுன்னா ஆகும். உதாரணமாக: ஒருவரின் மரணச் செய்தியை செவியுறும்போது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்ஸலாமு அலைக்கும்

ஒருவரை சந்திக்கும்போது 'உன் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்' என முகமன் கூறி வாழ்த்துவதே இறை விசுவாசியின் அழகிய பண்பாகும். அதற்கு பதிலாக உன் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும் என பதில் கூறுவது கடமையாகும். ஸலாமுன் அலைக்கும் என்ற சொற்றொடர் அல்குர்ஆனில் பல தடவைகள் இடம்பெற்றுள்ளது. வஅலைக்கு முஸ்ஸலாம் என மலர்ந்த முகத்துடன் பதில் வாழ்த்துக் கூறுவதை அல்குர்ஆன் விரும்புகிறது. இதுவே இஸ்லாமிய மார்க்கமானது சமாதானத்தை விரும்பும், சமாதானத்தைப் போதிக்கும் மார்க்கம் என கூறப்போதுமான சான்றாகும்.

## லா ஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ்

'அல்லாஹ்வைத் தவிர உயர்வான சக்தி எதுவுமில்லை' என்பதே இதன் பொருளாகும். ஒருவனின் தனிப்பட்ட ஆற்றல்கள் அனைத்தும் அல்லாஹ்வால் கட்டுப்படுத்தப்பட்டவையே என மனதார ஒப்புதல் அளித்தல் இதன் நோக்கமாகும். ஒருவனின் இயலாமையால் காரியம் கைநழுவிப் போகின்ற சந்தர்ப்பங்களிலும் இச்சொற்றொடரை மொழியலாம். இவ்வாறு இறை விசுவாசி ஒருவன் தனது இயலாமையை, கையாலாகாத்தனத்தை உணர்ந்து எல்லாம் வல்ல அல்லாஹ்வின்பால் அடிபணிவதே இதன் இறுதி இலக்காகும்.

## அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்

'தீங்கிழைக்கும் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடமே பாதுகாவல் தேடுகிறேன்' என்பதே இச்சொற்றொடரின் பொருளாகும். கெட்டவையின் இருப்பிடமான ஷைத்தானிடமிருந்து எப்போதும் விலகியே இருக்குமாறும் அதற்காக அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுமாறும் அல்குர்ஆன் பல இடங்களில் விசுவாசிகளைப் பணிக்கிறது. இறை விசுவாசிகளின் மனதில் கெட்ட எண்ணங்களைக் கொண்டு ஊசலாட்டங்களை ஏற்படுத்துவதே ஷைத்தானின் வேலையாகும். இதிலிருந்து பாதுகாப்புத் தேடவே அல்குர்ஆன் இச்சொற்றொடரை எமக்கு கற்றுத் தருகிறது. அல்குர்ஆனை ஓதுவதற்கு முன்னரும் இச்சொற்றொடரை மொழிந்து ஷைத்தானிடமிருந்து பாதுகாப்புத் தேடுமாறு அல்குர்ஆன் பணிக்கிறது.

## மாஷா அல்லாஹ்

மாஷா அல்லாஹ் என்பதன் பொருள் 'அல்லாஹ் நாடியவாறே' என்பதாகும். ஒருவரின் ஆற்றலைப் பாராட்டும்போது, ஒரு பொருளைப் பார்த்து ஆச்சரியம் அடையும்போது மாஷா அல்லாஹ் என மொழிந்து அனைத்து நல்ல விடயங்களும் அல்லாஹ்வின் புறத்தே இருந்து ஏற்படுகின்றன என்பதை ஓர் இறை விசுவாசி உள்ளத்தால் ஒப்புதல் அளிக்க வேண்டும். உதாரணமாக: ஒருவர் தான் புதிதாக வாங்கிய கைக்கடிகாரத்தை தனது நண்பனிடத்தில் காட்டும்போது அந்நண்பர் ''மாஷா அல்லாஹ்! அழகானதொரு கைக்கடிகாரம்'' என அல்லாஹ்வின் ஆற்றலைப் புகழ வேண்டும். இவ்வாறு இறைவனின் வல்லமையை உணர்ந்து கொள்வதே இதன் நோக்கம் ஆகும்.

## அஸ்தஃபிருல்லாஹ்

'அல்லாஹ்விடமே பாவ மன்னிப்புத் தேடுகிறேன்' எனும் இச்சொற்றொடர் ஒருவன் தான் பாவமிழைத்துள்ளதாக உணரும்போது, குற்ற உணர்ச்சி அவனை வாட்டி வதைக்கும்போது இறைவனிடம் மன்றாடி பாவ மன்னிப்பு தேடிக் கொள்ள இச்சொற்றொடர் உதவுகிறது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு நாளைக்கு எழுபது தடவைகளுக்கு மேல் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பைத் தேடக் கூடியவராக இருந்தார். அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடுவது இறை விசுவாசியின் பண்பாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

# மாறி வரும் இரவும் பகலும்

### இறைவனின் இரு பெரும் அத்தாட்சிகள்

அல்லாஹ் தன் படைப்புக்களில் ஒன்றின் மீது சத்தியமிட்டுக் கூறுகின்றான் என்றால் அது மிக முக்கியமானவொன்றாகவும் அவனது வல்லமையை வெளிப்படுத்தக் கூடிய ஒன்றாகவும் இருக்கும். அந்த வகையில்தான் அல்லாஹ் திருமறையில் இரவு என்ற ஓர் அத்தியாயத்தையும் இறக்கி அதில் இரவின் மீதும் பகலின் மீதும் சத்தியம் செய்கின்றான். (இருளால்) தன்னை மூடிக்கொள்ளும் இரவின் மீது சத்தியமாக, பிரகாசம் வெளிப்படும் பகலின் மீதும் சத்தியமாக (92:1,2) இந்த இரண்டும் வல்ல அல்லாஹ்வின் இரு பெரும் அத்தாட்சிகளாகும்.

### அல்குர்ஆனில் சொற்பிரயோகங்கள்

இரவு, பகல் குறித்த அநேக வசனங்களை அல்குர்ஆனில் பல இடங்களிலும் காணலாம். இரவையும் பகலையும் குறிக்கும் லைல், நஹார் என்ற இரு சொற்களும் சேர்ந்து அல்குர்ஆனில் சுமார் 60 இடங்களில் வருகின்றன. மேலும், இரவு - அதிகாலை, வைகறை, விடியற் காலை என பொருள்படும் லைல், ஸுப்ஹ் என்ற இரு சொற்களும் மூன்று *(6:96 74:33 81:17)* இடங்களிலும், இரவு என்று மாத்திரம் பொருள்படும் லைல் என்ற சொல் பதினைந்து *(2:187, 6:76 10:27 11:81 15:65 17:78,79 39:9 50:40 51:17 52:49 73:6,20 76:26 86:4)* இடங்களிலும் வருகிறது. இது மட்டுமின்றி, லைலத்துன் என்ற சொல் திருக்குர்ஆனில் எட்டு இடங்களிலும் *(2:52, 7:142, 7:143, 2:187, 44:3, 97:1,2,3)* அதன் பன்மை சொல்லான லயாலின் மூன்று *(19:10, 69:7, 89:2)* இடங்களிலும் வருகின்றது. இத்தனை தடவைகள் மீண்டும் மீண்டும் கூறி இரவினதும் பகலினதும் முக்கியத்துவங்களை அல்லாஹ் அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளான்.

### இரவும் பகலும்

பூமி தனது அச்சில் சுழலும்போது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பூமியின் ஒரு பாதி சூரியனுக்கு எதிர்ப்பக்கத்தில் இருப்பதனால் அப்பக்கத்துக்கு சூரிய ஒளி கிடைப்பதில்லை. இதன் காரணமாக அப்பகுதி இருட்டாக இருக்கும். எனவே, பூமியின் குறிப்பிட்ட ஓர் இடத்தில் சூரிய ஒளி இல்லாதிருக்கும் காலப்பகுதி இரவு என்றும் சூரிய ஒளி நேரடியாக விழும் பகுதி பகல் என்றும் அழைக்கப்படுகிறது. இருள் சூழ்ந்திருக்கும் நேரமே இரவு. ஒளி படர்ந்திருக்கும் நேரமே பகல். இரவு சூரியன் மறைவுக்கும் அடுத்த சூரியோதயத்துக்கும் இடைப்பட்ட காலமாகும். பகல் என்பது அந்த சூரிய உதயத்திற்கும் அதன் மறைவுக்கும் இடைப்பட்ட காலமாகும். ஓர் இரவும் ஒரு பகலும் கொண்டது ஒரு நாள் ஆகும்.


### இருளும் ஒளியும்

உண்மையில் இதனை விளக்குவதும் விளங்குவதும் சற்றுக் கடினமாக இருக்கும். அண்டவெளி முழுவதும் பரந்துகிடக்கும் ஒன்றுதான் இருள். இருள் என்பது இயற்கையானதும் நிரந்தரமானதுமாகும். வெளிச்சம் என்பது தற்காலிகமானது. பிரகாசிக்கும் அல்லது எரியும் ஒன்றின் இருப்புதான் வெளிச்சம். அது அணைந்துவிட்டால் மீண்டும் இருண்டுவிடும். சூரியன் உட்பட நட்சத்திரங்கள் அனைத்தும் தற்காலிகமானவையே! அவை எரிந்து ஓய்வு பெற்றதும் 'கருந்துளை' எனும் இருண்ட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலையை அடைகின்றன. வெளிச்சத்தின் ஆயுள் முடிந்த பின்னும் தொடர்ந்தும் இருக்கப்போவது இருள்தான். வெளிச்சத்துக்கு ஓர் ஆதாரம் தேவை. இருள் எந்த ஆதாரத்தையும் சார்ந்திருப்பதில்லை. பின்வரும் அல்குர்ஆனிய வசனத்தைப் படியுங்கள். ''எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே வானங்களையும் பூமியையும் படைத்தான் இருள்களையும் ஒளியையும் அவனே உண்டாக்கினான்.'' *(6:1)* இருள்தான் இயற்கையானது என்பதால் இது போன்ற அனைத்து வசனங்களிலும் இருளை அல்லாஹ் முற்படுத்தியுள்ளான். பிரபஞ்சத்தில் எங்கும் பரவியிருப்பது இருள் என்பதால் அதனைப் பன்மையில் (துலுமாத்) இருள்கள் எனப் பிரயோகித்துள்ளான், சுப்ஹானல்லாஹ்!

தற்போது ஒரு விடயத்தைப் பாருங்கள். இருளின் மாபெரும் மடியில்தான் இந்தப் படைப்புக்கள் அனைத்தும் இருக்கின்றன. படைப்புக்கள் யாவும் இருளின் எதிர்ப் பதமான ஒளியின்பால் எப்போதும் தேவையுடையனவாக இருக்கின்றன. படைப்புக்கள் நாட்டம் கொள்ளும் வெளிச்சத்தின் முழு முதற் காரணியாக இருப்பவன்தான் படைப்பாளன் வல்லவன் அல்லாஹ். அவனே உண்மையான ஒளியின் சொந்தக்காரன். அல்லாஹ் ஒருவன் என்பதால் வெளிச்சத்தைப் பற்றிக் கூறும் இடங்களிலெல்லாம் அதனை ஒருமையிலேயே (நூர்) குறிப்பிட்டுள்ளான். சக்தியை அழிக்கவோ, ஆக்கவோ முடியாது. ஒளிச் சக்தியும் அவ்வாறுதான். சக்தியின் முழு முதற் காரணமானவன் அல்லாஹ்வே. அவனுக்கும் ஆக்கமோ, அழிவோ இல்லை. அவனின் பக்கமே நாம் எப்போதும் மீள வேண்டும் என்பதனை ஞாபகப்படுத்தும் விதத்தில் தர்க்க ரீதியாக இவற்றை அமைத்திருப்பது உண்மையிலேயே மாபெரும் அற்புதம்தான்.

திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான்:

''அல்லாஹ் வானங்கள், பூமிக்கு ஒளி (ஏற்படுத்துபவன்); அவன் (ஏற்படுத்தும்) ஒளிக்கு உவமை விளக்கு வைக்கப்பட்டுள்ள மாடம் போன்றதாகும். அவ்விளக்கு ஒரு கண்ணாடி(க்குவியலில் இருக்கிறது. அக்கண்ணாடி ஒளிவீசும் நட்சத்திரத்தைப் போன்றதாகும். அது பாக்கியம் பெற்ற ஜைத்தூன் மரத்தி(ன் எண்ணெய்யி)னால் எரிக்கப்படுகிறது. அது கிழ்த் திசையை சேர்ந்ததுமன்று, மேல் திசையை சேர்ந்ததுமன்று. அதனை நெருப்புத் தீண்டாவிடினும் அதன் எண்ணெய் ஒளி வீச முற்படும், (இவை எல்லாம் சேர்ந்து) ஒளிக்கு மேல் ஒளியாகும். அல்லாஹ் தான் நாடியவரை தன்னுடைய ஒளியின் பால் நடத்திச் செல்கிறான். மனிதர்களுக்கு இத்தகைய உவமைகளை அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான். அல்லாஹ் யாவற்றையும் நன்கு அறிபவன்.'' *(24:35)*

**இரவின் பயன்கள்**


மனிதன் மட்டுமன்றி உயிர்ப் பிராணிகளும் கூட இரவின் ஆரம்பத்தில் தமது வசிப்பிடங்களை நோக்கிச் சென்று உறங்கி இளைப்பாறுகின்றன. தாவரங்களும் இரவில் ஓய்வெடுக்கின்றன. விதிவிலக்கான சில பிராணிகள்தான் இரவில் உணவு தேடி வெளியே சஞ்சரிக்கின்றன. இரவை அல்லாஹ் மனிதனுக்கு இளைப்பாறும் விதமாக ஆக்கியுள்ளான். ''உங்களுடைய தூக்கத்தை உங்களுக்கு இளைப்பாறுதலாகவும் இரவை உங்களுக்கு ஆடையாகவும் ஆக்கினோம்.'' *(78:09,10)*

**1. உறக்கம்**

உண்மையில் உறக்கம் என்பது படைப்பினங்களுக்கு அல்லாஹ் கொடுத்துள்ள மாபெரும் அருள். உறக்கம் இல்லாத எந்தப் படைப்பும் உலகில் இல்லை. படைப்பினங்களின் பூரணத்துவம் அவற்றுக்கு உறக்கம் இருக்கும்போதுதான். உறக்கம் இல்லாவிட்டால் அது ஒரு நோய். Sleeping Tablet உட்கொண்டாவது உறங்க முயற்சிப்பது எமது வழமை. ஆனால், படைப்பாளனின் பூரணத்துவம் உறக்கம் இல்லாதிருப்பதுதான். "(அல்லாஹ்) அவனை சிறு தூக்கமோ, ஆழ்ந்த நித்திரையோ பீடிக்காது.'' *(2:255)*

**2. உடலில் ஏற்படும் மாற்றங்கள்**

எமது உடலுக்கென்று ஒரு நேரசூசி இருக்கின்றது. அதிகாலை முதல் நள்ளிரவு வரை அது தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். உடலின் ஒவ்வொரு பாகமும் குறிப்பிட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட வேலையைச் செய்துவிட்டு நிறுத்திவிடும். இது சிர்கார்டியன் ரிதம் (Circadian Rhythm) அல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயலொஜிகல் குலொக் (Biological clock) என்றும் அழைக்கப்படுகின்றது. எந்த நேரத்தில், என்ன செய்ய வேண்டும் என்பதனை இது இயற்கையாகவே கண் காணித்து செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில், பகல் நேரத்தில் உடலுக்குத் தேவையான எந்த ஹோர்மோன்கள் சுரக்க வேண்டும் இரவில் எது சுரக்க வேண்டும் என்பதை இதுவே தீர்மானிக்கின்றது. இரவு உறக்கத்தில்தான் அங்க வளர்ச்சிகள் தூண்டப் படுகின்றன. உடலிலுள்ள கோடிக்கணக்கான கலங்கள் தினமும் புதுப்பிக்கப்படுவதும் உடல் சோர்வு நீங்கி புத்துணர்வு பெறுவதும், குறிப்பிட்ட வயது வரை உடல் வளர்ச்சியடைவதும், இந்த இரவுத் தூக்கத்தில் தான். அதேபோன்று, மெலடோனின் எனும் ஹோர் மோன் இரவின் கும்மிருளில் மட்டுமே சுரக்கக்கூடிய ஒன்றாகும். இது பகலில் நாம் களைப்புற்ற, காயப் பட்ட இடங்களை சுகப்படுத்தும் அற்புதப் பணியை செய்கின்றது. நீரிழிவைக் கட்டுப்படுத்தவும் புற்று நோய் வராதிருக்கவும் இந்த மெலடோனின் அவசியம் என்கிறது நவீன மருத்துவ விஞ்ஞானம்.

**3. பௌதிக மாற்றங்கள்**

இரவு நேரத்தில்தான் பூமியின் தட்ப வெப்ப நிலை கள் மாறி பூமி குளிர்ச்சியடைகின்றது. தாவரங்களும் தமது சுவாச முறையை மாற்றிக் கொள்கின்றன. இவ் வாறு பல மாற்றங்கள் இரவில் நடைபெறுகின்றன. பலங்காலம்தொட்டு ஜீவராசிகள் அனைத்தும் சூரிய உதயத்தையும் சூரிய அஸ்தமனத்தையும் மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. மனிதனும் ஆரம்பத் தில் அப்படித்தான் இருந்தான். ஆனால், மின்குமிழ் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து மின்குமிழை மைய மாகக் கொண்டு இயங்கி வருகின்றான். இன்று எமது அநேகருக்கு இரவு பகலாகவும் பகல் இரவாகவும் மாறியிருக்கின்றது. இன்னும் அதிகமானவர்கள் படுக் கைக்குச் செல்வது இரவு 12 அல்லது 1 மணிக்குத்தான். இதனால் புத்தி மயக்கம், சோர்வு, தலைவலி, படப டப்பு, சமிபாட்டுக் கோளாறு, மலச்சிக்கல் என பல் வேறு உபாதைகளுக்கும் அவர்கள் ஆளாகின்றனர்.

**பகலின் பயன்கள்**

இரவை இளைப்பாறும் காலம் என்று கூறிய அல் குர்ஆன் பகலைப் பற்றிக் கூறும்போது ''பகலை உங் கள் வாழ்க்கைத் தேவைகளைத் தேடிக் கொள்ளும் கால மாக ஆக்கினோம்'' *(78:11)* என்று குறிப்பிடுகின்றது. இரவில் ஓய்வெடுத்துவிட்டு புத்துணர்ச்சியுடன் பற வைகளும் விலங்குகளும் உணவு தேடுவதற்காக வெளிக் கிளம்பி விடுகின்றன. தாவரங்களும் சூரியனின் ஒளி யைப் பெற்று ஒளித்தொகுப்புக்குத் தயாராகின்றன. மனிதனும் பணி புரிய ஆரம்பிக்கின்றான். அது மட்டு மன்றி, பகல் காலத்தில் சூரிய ஒளியின் மூலம்தான் எமக்கு விற்றமின் D கிடைக்கின்றது. விற்றமின் D இருந்தால்தான் நாம் உட்கொள்ளும் உணவிலுள்ள கல்சியம் சத்துக்கள் பயன் தரும். அதேபோன்று, சூரிய ஒளி தோலில் படுவதால் மெலனின் சுரந்து உடற் தோலுக்கு வலு சேர்க்கின்றது. இப்படிப் பல பயன் களை பகலிலும் அல்லாஹ் வைத்திருக்கின்றான்.

**அருள்மிகு பகல்களும் இரவுகளும்**

ஜுமுஆ, இரு பெருநாள் பகல் நேரங்கள் போன்று சில இரவுகளும் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அல்லாஹ் அருள்மிக்கதாக ஆக்கிவைத்துள்ளான். நபியவர்கள் மிஃராஜ் எனும் விண்ணுலகப் பயணம் மேற்கொண்டதும் இரவில்தான். ஹிஜ்ரத் எனும் மதீனா நோக்கிய பயணம் மேற்கொண்டதும் இரவில்தான். அர்ஷில் இருக்கும் அல்லாஹ் தன் அடியார்களை நோக்கி அடிவானத்திற்கு இறங்குவதும் இரவில்தான். திருமறைக் குர்ஆன் உலகுக்கு இறங்கியதும் லைல துல் கத்ர் எனும் அந்த இரவில்தான், சுப்ஹானல்லாஹ்!

நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப் பிலும் இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் அறி வுடையோருக்கு உறுதியாகவே பல அத்தாட்சிகள் இருக்கின்றன. இவை பற்றி சிந்திப்பவர்கள் நின்ற நிலையிலும் இருந்த இருப்பிலும் தங்கள் விலாப் புறங் களில் சாய்ந்தவாறும் அல்லாஹ்வின் சிந்தனையிலேயே இருப்பார்கள். பின்னர் வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பாற்றலைப் பற்றி ஆராய்ச்சி செய்து ''எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணுக்காகப் படைக்கவில்லை. நீ தூய்மையானவன்; நரக நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக! (என்று கூறுவார்கள்).'' *(3:191)*





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மன்னிப்பு

எம்.ஏ. ரஹ்மான்

ஒரு சமயம் கலீபா மஹ்தியின் ஆட்சிக் காலத்தில் ஓர் ஏழைப் பெண் கலீபாவினுடைய அந்தப்புரத்திற்கு வந்தாள்; கதவைத் தட்டினாள். பணியாள் கதவைத் திறந்ததும் மிகத் துன்பப்படுவதாகத் தோன்றும் ஓர் ஏழைப் பெண் நின்றாள். அவளைச் சந்திப்பதற்குக் கனிவார்ந்த ராணியார் சம்மதித்தார்.

ராணியாருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதைகளை அந்த ஏழைப் பெண் செலுத்திய பின்னர், ''உமைய்யா கலீபாக்களிலே கடைசி மன்னருடைய மகள் நான். உங்களை நான் பார்க்க வந்ததின் நோக்கம்...'' எனக் கூறத் தொடங்கினாள்.

அவள் தன் வாக்கியத்தை முடிப்பதற்கிடையிலேயே ராணியார் மிகுந்த கோபவசப்பட்டு, ''உன்னுடைய குடும்பத்தார் அதிகாரத்தில் அமர்ந்திருந்த பொழுது எங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு இழைக்கப்பட்ட மிகக் கொடூரமான அநீதிகளை அதற்கிடையில் இவ்வளவு விரைவாக மறந்து போனாயா?'' என்று கத்தினார்.

ஏழைப் பெண், ராணியார் கூறியவற்றை அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். பின்னர் கசப்பான முறுவலுடன், ''இன்று நீங்கள் இருப்பதைப் போன்றே நானும் அன்று கர்வமுள்ளவளாக இருந்தேன். ஆனால், அல்லாஹ் என்னுடைய கர்வத்தை அடக்கி விட்டான். நான் இன்றுள்ள நிலையை உங்களுடைய கண்களாலேயே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. நாங்கள் ஒரு காலத்திலே செய்த அதே தவறுகளைத் திருப்பிச் செய்வதின் மூலம் இதேபோன்ற ஒரு நிலை உங்களுக்கும் ஏற்பட வேண்டாம் என நீங்கள் வருந்தி அழைக்கின்றீர்களா?'' எனக் கேட்டாள்.

இவ்வாறு கூறி அந்த ஏழைப் பெண் சென்றுவிட்டாள். அந்த வார்த்தைகள் ராணியாரின் நெஞ்சை ஆழமாகத் துளைத்தன. ஒரு கணத்திலே ராணியாருக்குப் புத்தித் தெளிவு ஏற்பட்டது. ஓடிச் சென்று அந்த ஏழைப் பெண்ணை அணைத்துக் கொண்டார்.

''நான் ஏழை; ஆதரவற்றவள்; கந்தல் துணியிலே இருக்கின்றேன். உங்களைப் போன்ற உயர்ந்த அந்தஸ்திலே உள்ள ஒருவரின் அணைப்பிற்கு அருகதையற்றவள்'' என அவள் கூறினாள்.

உடனே ராணியார் தமது பணிப்பெண்ணை அழைத்து ''இந்தப் பெண்ணைப் பன்னீரிலே குளிப்பாட்டுங்கள். மிகச் சிறந்த ஆடைகளை அணியக் கொடுங்கள். மிக உயர்ந்த உணவுகள் அடங்கிய விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' எனக் கூறினார்.

அக்கட்டளை நிறைவேற்றப்பட்டது. ராணியாரும் அப்பெண்ணும் ஒரே தட்டிலேயே இரு சகோதரிகளைப் போல விருந்துண்ணத் துவங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இலங்கை பாராளுமன்றம்

- 1982.03.26 இல் இலங்கையின் பழைய பாராளுமன்றம் காலி முகத்திடலில் (Galle Face) இறுதியாகக் கூடியது.
- 1982.04.29 இல் ஸ்ரீ ஜயவர்த்தனபுரயில் புதுக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.
- வீடமைப்பு அமைச்சராக இருந்த ரணசிங்க பிரேமதாஸவின் ஆலோசனைப்படி புதுக் கட்டடம் கட்டப்பட்டது.
- பழைய கட்டடம் ஆளுநர் ஹர்பட்ஸ்டென்ஸின் ஆலோசனைப்படி கட்டப்பட்டது.
- புதுக் கட்டட அடிக்கல் நாட்டு விழா 1980.09.22 இல் நடைபெற்றது.
- புதுக் கட்டடத்தை நிர்மாணிக்கும் பணி ஜப்பானிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- இக்கட்டடத்தை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன திறந்து வைத்தார்.
- இப்புதுக் கட்டடத்தைச் சுற்றி தியவன்ன ஓயா அமைந்துள்ளது.

**அக்ரமா பின்த் ஐயுப்கான்**
**சுமையா மகளிர் அ.க.**
**கிண்ணியா**

# மனித உடல் பற்றிய தகவல்கள்



- சராசரி மனிதனின் குருதியின் அளவு - 5.5 லீற்றர்
- மனித உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரின் சராசரி அளவு - 1.5 லீற்றர்
- சராசரி மனிதன் ஒரு நாளில் அருந்த வேண்டிய நீரின் அளவு - 6 லீற்றர்
- மனித உடலில் உள்ள இரத்த நாளங்களின் மொத்த நீளம் - 100 000 கிலோ மீற்றர்
- மனித உடலில் மிகவும் குளிரான பகுதி - மூக்கு
- மனித உடலில் வியர்க்காத உறுப்பு - உதடு
- மனித உடலின் சிவப்பு அணுவின் சராசரி ஆயுட்காலம் - 120 நாட்கள்
- இறந்த மனிதனின் இதயத்தின் உயிர்த்துடிப்பு அடங்கு நேரம் - 20 நிமிடங்கள்
- மனித நகம் வளரும் வருட சராசரி அளவு - 12.5 அங்குலம்
- மனித உடலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை - 200 000

**ஸதா அய்மன்**
**அறக்கியால, கெக்குணகொல்ல**

# சர்வதேச தினங்கள்

- ஜுலை 01 - உலக மருத்துவர் தினம்
- ஜுலை 17 - வறுமை ஒழிப்பு தினம்
- ஜுலை 18 - நெல்சன் மண்டேலா சர்வதேச தினம்
- ஜுலை 28 - சர்வதேச அகதிகள் தினம்
- ஆகஸ்ட் 01 - தாய்ப்பால் தினம்
- ஆகஸ்ட் 03 - உலக நண்பர்கள் தினம் (ஐரோப்பிய நாடுகள்)
- ஆகஸ்ட் 13 - இடதுகைப் பழக்கமுடையோர் தினம்
- ஆகஸ்ட் 30 - காணாமல் போனார் தினம்

**றிப்கா ஷீம் பின்த் அஸ்வத்**
**சுமையா ம.அ.க.**
**கிண்ணியா - 04**

# கண்டுபிடிப்புக்கள்

1. சாண்ட்விச்சைக் கண்டுபிடித்தவர்
   - ஜான் மான்டேகு
2. சவர்க்காரத்தைக் கண்டுபிடித்தவர்
   - ஆண்ட்ரு பியர்ஸ்
3. காகிதத்தைக் கண்டுபிடித்தவர்
   - ட்சாய் லூன்
4. போக்குவரத்து சமிஞ்சையைக் கண்டுபிடித்தவர்
   - வெஸ்டர் வயர்
5. சுவிங்கத்தைக் கண்டுபிடித்தவர்
   - தாமஸ் ஆதம்ஸ்

**சப்றினா புர்கானுத்தீன்**
**அல்முஃமினாத் பெ.அ.க.**
**அக்குரணை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக பிரபலர்கள் சிலர்

- பில்கேட்ஸ்: கணினி மென்பொருள் உற்பத்தி நிறுவன முன்னாள் தலைவரான இவர் உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரராக இருந்தவர்.
- யசீர் அரபாத்: பலஸ்தீன் விடுதலை இயக்கப் போராளி.
- சதாம் ஹுசைன்: ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதியான இவர் அமெரிக்காவில் கைதியாக்கப்பட்டு தூக்குத் தண்டனைக்கு உள்ளானார்.
- மா.ஓ. சேதுங்: நவீன சீனாவின் சிற்பி.
- இடி அமீன்: சதிப் புரட்சி மூலம் ஆட்சிப்பீடம் ஏறிய உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி.
- ஹெலன் கெல்லர்: பார்க்கவோ, பேசவோ, கேட்கவோ முடியாத இப்பெண்மணி உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்.

**அக்ரமா பின்த் ஐயுப்கான்**
**சுமையா ம.அ.க, கிண்ணியா**

# முஸ்லிமின் உயர் குணங்கள்

❖ உண்மையான முஸ்லிமுக்கு சில பண்புகள் இருக்கின்றன. யாராவது தன்னை முஸ்லிம் என்று கூறிக் கொள்வதாக இருந்தால் 7 பண்புகள் அவரிடம் காணப்பட வேண்டும்.

01. அவன் அல்லாஹ்வுக்காக மட்டும் கோபம் கொள்வான்.
02. தனக்காக வேண்டி அவன் யாரையும் பழிவாங்க மாட்டான்.
03. பிறரை எக்காரணம் கொண்டும் ஏச மாட்டான்.
04. யாராவது தனக்கு ஏசினால் கூட பதிலுக்கு அவன் ஏச மாட்டான்.
05. மற்ற மனிதர்களைப் பற்றி ஒருபோதும் தப்பபிப்பிராயம் கொள்ள மாட்டான்.
06. ஒருபோதும் பொய் பேசவோ, புறம் பேசவோ மாட்டான்.
07 எந்தவோர் உணவையும் குறை கூற மாட்டான். பசியிலும் தாகத்திலும் கூட பொறுமையாக இருப்பான். அல்லாஹ்வுக்காக எந்த கஷ்டத்தையும் தாங்கிக் கொள்ளும் மனோநிலையுடன் இருப்பான். இறை நாட்டத்தை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வான். எந்த இக்கட்டான கட்டத்திலும் தனது பண்பாடுகளை விட்டுக் கொடுக்க மாட்டான்.

**ஆர். றமீஷா நுஸ்ரத்**
**ஸஹ்றா வளாகம்**
**ஓட்டமாவடி**




# சான்றோர் வாக்கு...



1. ''நாளை இறப்பவர் எனக் கருதி வாழவும்;
எப்பொழுதும் வாழ்பவர்போல் நினைத்து கற்றுக் கொள்ளவும்.''
(மகாத்மா காந்தி)

2. ''குளிர் காலம் வரும்; இன்னும் பனிப் புயலும் வீசும்;
பனிக்கட்டிகளுடனான கொடிய சூறாவளியும் வீசும்;
ஆயினும் வசந்த காலம் எந்நாளிலேனும் வருதல் உண்மையே.''
சிங்கீஸ் ஐத்மாதவ்
(ஆசிரிய கீத ஆசிரியை)

3. ''வெற்றிக்குத் தேவையான முதல் விதி; தோற்கா வண்ணம் செயற்படுவதற்கு திடம் கொள்ளல் ஆகும். இரண்டாவது விதி; முதல் விதியினை மறக்காதிருத்தலாகும்.''
(வொரன் பறெற்)

4. ''தோல்வி எனும் கொடிய நோய்க்கான சிறந்த சிகிச்சை அல்லது மருந்து திடமான நம்பிக்கையும் வலுவான அர்ப்பணிப்புமாகும்.'' (அப்துல் கலாம்)


5. ''உங்களுக்கு பறக்க முடியாவிடின் ஓடவும். ஓட முடியாதது விடின் நடந்து செல்லவும். நடந்து செல்வதற்கு முடியாது விடின் தவழவும். நீங்கள் எதைச் செய்தாலும் திடங்கற்பத்துடன் முன்னே செல்ல வேண்டும்.''
(மார்டின் லூதர் கிங்)

**நபீல் அஹ்மத்**
**சிராஜிய்யா அ.க.**
**ஓட்டமாவடி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடுகளின் பழைய, புதிய பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. | டச்சு கயானா | - சுரினாம் |
| 2. | அப்பர் வோல்டா | - புரக்கினா பாஸோ |
| 3. | அபிசீனியா | - எத்தியோப்பியா |
| 4. | கோல்ட் கோஸ்ட் | - கானா |
| 5. | தென்மேற்கு ஆபிரிக்கா | - நமீபியா |
| 6. | வட ரொடீஷியா | - சாம்பியா |
| 7. | தென் ரொடீஷியா | - சிம்பாப்வே |
| 9. | டாங்கனீகாம, சன்ஸிபார் | - தன்சானியா |
| 10. | கோட்டே டி ஐவோயர | - ஐவரி கோஸ்ட் |
| 11. | சாயிர் | - காங்கோ |
| 13. | சோவியத் யூனியன் | - ரஷ்யா |
| 14. | பர்மா | - மியன்மார் |
| 15. | கிழக்கு பாகிஸ்தான் | - பங்களாதேஷ் |
| 16. | சிலோன் | - இலங்கை |
| 17. | கம்பூச்சியா | - கம்போடியா |
| 18. | பாரசீகம்,பெர்ஷியா | - ஈரான் |
| 19. | மொஸபதேமியா | - ஈராக் |
| 20. | சீயம் | - தாய்லாந்து |
| 21. | பார்மோஸ | - தாய்வான் |
| 22. | ஹாலந்து | - நெதர்லாந்து |
| 23. | மலாவாய் | - நியூசிலாந்து |
| 24. | மலகாஸி | - மடகாஸ்கர் |
| 26. | டச் ஈஸ்ட் இண்டீஸ் | - இந்தோனேஷியா |
| 27. | சாண்ட்விச் தீவுகள் | - ஹாவாய் |
| 28. | அப்பர் பெரு | - பொலிவியா |

**உமைஸ் அஹமட்**
**தரம் 10**
**கொ/ அல் ஹிக்மா கல்லூரி**
**கொழும்பு - 12**

# வீழ்ந்து கிடக்கும் நிஜங்கள் சில...

- உன்னை மாற்று உன்னால் மனிதர்கள் மாறட்டும்.
- சுதந்திரமான உள்ளங்கள் என்றுமே இரகசியங்களின் புதைகுழிகள்.
- மனிதர்களுக்கு நன்றி செலுத்த மறந்தவன் இறைவனுக்கு நன்றி செலுத்த நினைப்பதில்லை.
- வைத்தியனே! முதலில் உன் ஆன்மாவிற்கு வைத்தியம் செய்.
- மனிதர்கள் சான்றைவிட செயல்களின் சான்றே மிகச் சிறந்தது!
- ஏக்கங்களுடன் கனவு காணுங்கள்; இறையருளால் நோக்கங்களை அடையக் காண்பீர்.

**அஹமத் லெப்பை அஹமட் ஹிமாஸ்**
**தரம் - 9**
**நாவலடி**

---

## உங்கள் வாழ்க்கையில் சிந்தனைக்கும் மௌனத்துக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்...

# நபிமொழிகள்...

- மௌனம் சாதித்தவன் வெற்றியடைந்து விட்டான்.
- நாவை அடக்கி ஆளுங்கள். அதற்கு அதிகாரம் கொடுக்காதீர்கள். உங்கள் அதிகாரத்திற்கு கீழே அது இயங்கட்டும் அதில்தான் வெற்றி உண்டு.
- பசி, தாகம், பேச்சு இந்த மூன்றையும் வெற்றி கொண்டவன் தீமைகள், விபரீதங்கள் அனைத்தையும் விட்டும் விடுதலை பெற்றவன்.
- தன் நாவை ஒருவன் பாதுகாத்துக் கொண்டால் அவன் மானத்தை இறைவன் பாதுகாப்பான்.

**நுஸீதா மௌஜுூட்**
**இஸ்லாஹிய்யா வளாகம்**
**புத்தளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி
அதிபர்
களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஸுஹுபுகள் எத்தனை?
2. பிர்அவ்ன் என்பவன் எந்த நபிக்கு எதிராகப் பெரிதும் செயற்பட்டான்?
3. ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் புனித இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு எத்தனை வயதாக இருந்தது?
4. யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரை இரும்பு மதிலுக்குள் அடைத்த ஸஹாபியின் பெயர் என்ன?
5. 30 ஜுஸுக்களையுடைய அல்குர்ஆனில் எத்தனை ஐன்கள் உண்டு?
6. ஹாரூன் அல்ரஷீத் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு கலீபா மாமூன் அவர்களால் வளர்க்கப்பட்டது என்று ஏற்றுக் கொள்ளும் நூல் நிலையம் அப்பாஸியக் கால நூல் நிலையங்களுள் மணிமுடி போன்றது. இதன் பெயர் என்ன?
7. ஹஸரத் பிலால் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அடிமையாக வைத்துக் கொண்டு பெரும் கொடுமைப்படுத்திய எஜமானின் பெயர் என்ன?
8. மணமகன் மணமகளை ஏற்குமுன் தொழ வேண்டிய தொழுகை எது?
9. வேற்றுமொழி பேசுவோருடன் தொடர்பு கொள்வதற்காக அந்நிய மொழிகளைக் கற்குமாறு முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸஹாபாக்களை வேண்டினார்கள். இதனால் 17 தினங்களில் ஹீப்ரு மொழியைப் பயின்ற பெருமைக்குரிய நபித்தோழரின் பெயர் என்ன?
10. யுத்தங்களின்போது கைப்பற்றப்பட்ட பொருட்கள், ஆயுதங்கள், குதிரைகள் போன்றவற்றால் பெறப்படும் வருமானம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
11. அல்குர்ஆன் வசனங்கள் முழுவதும் இறங்கிய பின் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எத்தனை தினங்கள் உயிர் வாழ்ந்தார்கள்?
12. 'அஃலுல் கிதாப்' என்பதன் பொருள் என்ன?
13. 'பைரஹா' என்ற தனது தோட்டத்தை அல்லாஹுத் தஆலாவின் பாதையில் தர்மம் செய்த ஸஹாபியின் பெயர் என்ன?
14. இஸ்லாத்தில் மனிதரின் பணிகள் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. கிலாபத், இபாதத், இமாறத் என்பனவே அவையாகும். இவற்றுள் 'இமாறத்' எனக் குறிப்பிடப்படும் பணி எது?
15. பாரசீகர்களுள் முதன் முதலில் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டவர் அகழி யுத்தத்துக்கான அகழியை வெட்டுவதற்கான ஆலோசனை வழங்கிய நிபுணராகவும் திகழ்ந்தவர். அறிவில் லுக்மான் ஹக்கீமுக்கு நிகரானவர் என்று அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களால் புகழப்பட்டவர். அன்னாரின் பெயர் என்ன?
16. நோன்பு முஃமின்கள் மீது விதியாக்கப்பட்ட ஆண்டு எது?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. நேபாளத்தில் அரசுக்கெதிராக வன்முறைகளில் ஈடுபட்ட கிளர்ச்சிவாத இயக்கத்தின் பெயர் யாது?
2. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1798 தொடக்கம் சில ஆண்டுகள் 'இரட்டை ஆட்சிக் காலம்' என அழைக்கப்படுகிறது. காரணம், சிவில், நிர்வாகம் என்பனவற்றுக்கு தேசாதிபதியும் வருமானம், வர்த்தகம் என்பனவற்றுக்கு பிரித்தானியாவின் கிழக்கிந்திய கம்பனியும் பொறுப்பாக இருந்தமையாகும். இந்த இரட்டை ஆட்சிக் காலம் முடிவுக்கு வந்தபோது ஏமியன்ஸ் ஒப்பந்தத்தின்படி இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாகியது. இவ்வாறு முடிக்குரிய நாடாக இலங்கை மாறியது எத்தனையாம் ஆண்டிலாகும்?
3. கணக்கியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
4. இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் மட்டக்களப்பு தொகுதியின் சார்பாக இடம்பெற்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் யார்?
5. மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

விடைகள் 29 ஆம் பக்கம் பார்க்க...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

கீழுள்ள படங்களுக்கு பொருத்தமான வசனங்களை இணைக்குக.



١ .أَيْنَ تَقِفُ الحَافِلَةُ؟
٢ .مَنْ فِيْ الحَافِلَةِ؟



٣ .أَيْنَ تَقِفُ الحَافِلَةُ الآنَ؟
٤ .مَاذَا يَفْعَلُ التَّلَامِيْذُ؟




٥ .أَيْنَ وَقَفَ التَّلَامِيْذُ؟
٦ .مَاذَا يَفْعَلُونَ؟



٧ .أَيْنَ يَقِفُونَ الآنَ؟
٨ .لِمَاذَا يَضْحَكُوْنَ؟



٩ . أَيْنَ جَلَسَ التَّلَامِيْذُ؟
١٠ . مَاذَا يَفْعَلُونَ؟



١١ . لِمَاذَا يُغْنِي التَّلَامِيْذُ وَيَضْحَكُوْنَ؟
١٢ . إِلَى أَيْنَ سَيَعُودُونَ؟

يُغْنِي التَّلَامِيْذُ وَيَضْحَكُوْنَ لِأَنَّهُمْ قَضُوْا يَوْمًا سَعِيْدًا.
سَيَعُوْدُوْنَ إِلَى مَنَازِلِهِمْ.

جَلَسَ التَّلَامِيْذُ تحْتَ شَجَرَةٍ كَبِيْرَةٍ.
يتَنَاوَلُوْنَ الطَّعَامَ

يَقِفُونَ الآنَ أَمَامَ الفِيْلِ
يَضْحَكُوْنَ لأَنَّ الفِيْلَ يَأْكُلُ الطَّعَامَ سَرِيْعًا

وَقَفَ التَّلَامِيْذُ أَمَامَ الجَمَلِ
يُقَدِّمُوْنَ لَهُ بَعْدَ الطَّعَامِ.

تَقِفُ الحَافِلَةُ الآنَ أَمَامَ حَدِيْقَةِ الحَيَوَانَاتِ.
التَّلَامِيْذُ يَنْزِلُوْنَ مِنَ الحَافِلَةِ.

تَقِفُ الحَافِلَةُ أَمَامَ المَدْرَسَةِ.
فِيْ الحَافِلَةِ بَعدَ التَّلَامِيْذِ الصِّغَار.


**மேலுள்ள வசனங்களை கொண்டு சிறிய கதை ஒன்றினை எழுதுவோம்**

أَرَادَ بَعْدَ التَّلَامِيْذِ أَنْ يَذْهَبُوا فِيْ رِحْلَةٍ إِلَى حَدِيْقَةِ الحَيَوَانَات، وَقَدْ رَكِبُوا الحَافِلَة مِنَ المَدْرَسَةِ عِنْدَ مَا وَصَلَتْ إِلَى حَدِيْقَةِ الحَيَوَانَات نَزَلُوْهَا مِنْهَا وَنَزَلُوا مِنْهَا وَذَهَبُوا إِلَى مَكَانِ الجَمَلِ وَ وَقَفُوا أَمَامَهُ ثُمَّ قَدَّمُوا لَهُ بَعْدَ الطَّعَامِ. بَعْدَ ذَلِكَ ذَهَبُوا إِلَى مَكَانِ الفِيْلِ وَقَدَّمُوا وَقَدَّمُوا لَهُ بَعْدَ الطَّعَامِ أَيْضًا. كَانَ الفِيْلُ يَتَنَاوَلُ الطَّعَامَ سَرِيْعًا وَلِهَذَا كَانَ التَّلَامِيْذُ يَضْحَكُونَ ذَهَبَ التّلَامِيْذُ إِلَى شَجَرَةٍ كَبِيْرَةٍ وَجَلَسُوا عَلَى الأَرْضِ، يَتَنَاوَلُوْنَ الطَّعَامَ. عَادَ التَّلَامِيْذُ إِلَى مَنَازِلِهِمْ بِالْحَافِلَةِ وَهُمْ يُغَنُّون، لَقَدْ قَضَوْا يَوْمًا جَمِيْلًا فِيْ حَدِيْقَةِ الحَيَوَانَات.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழுள்ள படங்களுக்கு பொருத்தமான வசனங்களை இணைக்குக.



١ .مَاذَا يَرْكَبُ الوَلَدُ؟

٢ .إِلَى أَيْنَ هو ذَاهِبٌ؟

الطِّفْلُ الآنَ عَلَى الشَّاطِئِ

خَرَجَ الأَطْفَالُ مِنَ المَاءِ، لِيُشَاهِدُوا صَدِيْقَهُمْ



٣ .مَاذَا سَيَفْعَلُ الوَلَدُ؟

٤ .مَاذَا يَفْعَلُ الأَطْفَالُ؟

سَيُخْرِجُ الوَلَدَ مِنَ المَاءِ

لَا، هُوَ لَا يَعرفُ السَّبَاحَةَ



٥ .أَيْنَ الوَلَدُ؟

٦ .مَاذَا يَفْعَلُ ؟

يَصْرُخُ الطِّفْلُ لِأَنَّهُ بَدَأَ يَغْرَقُ.

الوَلَدُ يَذْهَبُ إِلَيْهِ.



٧ .لِمَاذَا يَصْرُخُ الأَطْفَالُ؟

٨ .مَاذَا فَعَلَ الوَلَدُ ؟

يَرْتَدِي مَلَابِسَ السَّبَاحَةِ.

يَسْبَحُونَ فِيْ المَاءِ.



٩. مَاذَا سَيَفْعَلُ الوَلَدُ ؟

١٠. هَلْ الطِّفْلُ يَعرِفُ السَّبَاحَةَ؟

يَرْكَبُ الوَلَدُ دَرَّاجَةً.

هُوَ ذَاهِبٌ إِلَى البَحْرِ.



١١. أَيْنَ الطِّفْلُ الآن؟

١٢. لِمَاذَا خَرَجَ الأَطْفَالُ مِنَ المَاءِ؟

الوَلَدُ في المَاءِ


هُوَ يَسْبَحُ

மேலுள்ள வசனங்களை கொண்டு சிறிய கதை ஒன்றினை எழுதுவோம்

أَرَادَ الوَلَدُ أَنْ يَذْهَبَ فِي رِحْلَةٍ إِلَى البَحْرِ وَقَدْ رَكِبَ الدَّرَّاجَةَ مِنَ البَيْتِ وَعِنْدَمَا وَصَلَ إِلَى شَاطِئِ البَحْرِ نَزَلَ مِنْهَا...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## *Assalamu alaikum friends!*

The ever blessed month of Ramadan is over. Hope you all are still with the same energetic spirit of doing what's good and abstaining from what's evil. Well, these traits are meant to be followed not only during the Ramadan but also throughout our entire life time...Yeah! Keeping this in mind let's move on to something fresh.........

# *Idioms!!!!*



That's what we are going to learn today. Have you all come across of this word before? Hope many of you are answering yes and for those who have no idea regarding this, this definition might help

"Idioms are simply a form of expressing something in a different style, mostly in a figurative manner". For example you may put forward a phrase and it may mean something totally contrasting to it. The use of idioms makes any language richer and more interesting. In the language of English there appears to be more than 25,000 idiomatic expressions.

Here are a few selected idioms with their actual meanings, make use of them either when you speak or write essays.

1. Beat around the bush

   Avoiding the main topic. Not speaking directly about the issue
2. Best of both worlds

   Meaning: All the advantages.
3. Best thing since sliced bread

   A good invention or innovation. A good idea or plan.
4. Costs an arm and a leg

   This idiom is used when something is very expensive.
5. Cry over spilt milk

   When you complain about a loss from the past.
6. Give the benefit of the doubt

   Believe someone's statement, without proof.
7. Let the cat out of the bag

   To share information that was previously concealed
8. Sit on the fence

   This is used when someone does not want to choose or make a decision.
9. Speak of the devil!

   This expression is used when the person you have just been talking about arrives.
10. A hot potato

    Speak of an issue (mostly current) which many people are talking about and which is usually disputed

(Courtesy: http://www.smart-words.org/quotes-sayings/idioms-meaning.html)

Attention: when you write articles to us the next time, try out writing a poem with the use of idiom either chosen from above or from your own findings. The best ones would be published in the coming issues Inshaa Allah.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

Whenever a strong wind blew, anxiety appeared on the face of the Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam) (fearing that wind might be a sign of Allah's wrath).

**Bukhari Vol. 2: No. 144**

## Giggle a bit:

Patient: The medicine prescribed by you is not available in any shop, doctor

Doctor: Oh! I'm so sorry. That's my signature!

Patient: !!!

**A cool fact:** France is the only country where mosquitoes are not found!

## Your Corner

# To become a genius...

If we want to become a genius, we must use both hemispheres of our brain.

What is meant by brain's hemispheres?

Every human being has a brain. That brain has two separated parts, which are called the hemispheres of the brain.

The theory of brain is that, the left hemisphere of our brains controls the right parts of our body and the right hemisphere of our brains controls the left parts of our body.



According to the above theory, it could be noticed that the left hemisphere of our brains are used more because we mostly use the right parts of our body. But, if we want to become a genius we must use the right hemisphere of our brains as well.

How can we use both the hemispheres of our brain?

Use your left hand to do the below mentioned activities

- Polish shoes
- Groom hair
- Fasten buttons
- Household works
- Operate TV remote control

IF you start using both parts of your brain, then Inshaa Allah you will be a genius.

***M.A.M.Faizam***
***Grade 10***
***Al Hidhaya MV***

# My favourite Game

My favourite game is football. I play it every day with my friends. Nowadays, it is a popular game in our country. It is played in every part of our country. It is played in towns as well as villages. The game is played with a leather ball. Inside the ball, there is a rubber bladder. Air is pumped into bladder with an air pump. The game is played on a level ground. The ground is 100 yard long and 55 yard broad. The ground is divided into two sides. All the end of each side, there is a goal-post. The game is played between two teams. Each team consists of eleven players. There are five forwards, three half- backs, two full-backs and a goal-keeper on each side. The forwards try to kick the ball into the goal-post of the opposite party, while the backs and the goalkeeper try to save goals. There is a referee to supervise the game . He is helped by two linesmen. The game is played for 90 minutes. There is a break for 10 minutes.

***Nisra Nihmatullah***
***Ku/ Al hudha m.m.v.***
***Rideegama***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# I love my parents

My parents are my life. They love me deeply and help me in all my efforts. They look after me very well. Therefore my parents are the greatest wealth for me in this world. My father takes care of me by working hard and bringing money to fulfill our needs. My parents are wonderful. I depend on them and I cannot live without them. I love my parents as my life.

***M.N.M.Minhaj***
***K/Denu/As – Siraj , Boys College***
***Dellenga, Gelioya.***

# My self



My name is Hadhiya Deen.
My school is B/Al ilma m.v.
I am six years old.
I am in grade two.
My father is Mr kuthubdeen.
My mother is Mrs Fathima.
I have two brothers & a sister
My friend is Aysha Jahas.
I like ice cream.
I want to be a good Citizen in the future

**Thank you**

***Hadhiya Deen,***
***Grade 2,***
***B/Al ilma m.v.***
***GURUTALAWA.***

# Useful words

- Daily one apple...........................No doctor
- Daily 5 Almonds..........................No cancer
- Daily 1 lemon...............................No fatty body
- Daily 1 glass of milk..............No bone problem
- Daily 12 glasses of water.........No skin problem
- Daily 4 dates...............................No weakness
- Daily 5 times Namaz..................No tension
- Daily reading...............................Peaceful life

***Thoufeek Thasmila***
***GCE A/L(2015 – 2017)***
***NK/Abukkagama.M.M.V***

# My HOBBY

My hobby is reading whether it is news paper, news, novels, G K book or any knowledgeable book written by any good author. I always read story books, news paper, magazines. I really know the benefits of my reading habit. It enables me to gain all the general knowledge about any topic. This habit makes me learned about the world wonders, history of origin of life, space, animals, plants, aquatic animals, human achievements, and other fascinating things about world.

***Zain marzook***
***maho***



I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஹம்மத் அலி:

## வெள்ளைத் தேசத்தை வெற்றி கொண்ட கறுப்பு வீரர்



அயாத் அஹமட்

### முஹம்மத் அலியின் இளமைக் காலம்

1942 ஜனவரி 17 ஆம் திகதி அமெரிக்காவில் கென்ரக்கி மாநிலத்தின் லூயிஸ்வில் பிறந்த முஹம்மத் அலியின் இயற்பெயர் கெஸியஸ் க்ளே என்பதாகும். கிறிஸ்தவ மதத்தில் பிறந்த அவர், பிற்காலத்தில் இஸ்லாத்தைத் தழுவி, தன் பெயரை முஹம்மத் அலி என்று மாற்றிக் கொண்டார். அவரது இயற்பெயரில் உள்ள 'க்ளே' என்ற சொல் கறுப்பு அல்லது களி என்று பொருள்படுவதால், அவர் அதனைப் பயன்படுத்துவதை வெறுத்தார். முஹம்மத் அலியின் தந்தை ஒரு பெய்ன்டர் ஆக பணி புரிந்து வந்ததோடு, தாயார் பணக்கார வீடுகளில் சமையல் வேலைகள் செய்து வந்தார். இவர்கள் ஆபிரிக்க பூர்வீகத்தைக் கொண்டவர்கள். முஹம்மத் அலியின் வாழ்வின் ஆரம்பக் கூறுகளின்போது, அவர் வாழ்ந்த பகுதியில் ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் பெருமளவு காணப்பட்டன. இதனால் முஹம்மத் அலியும் பாதிக்கப்பட்டிருந்தார்.

முஹம்மத் அலிக்கு 12 வயதாக இருக்கும்போது பிறந்த தினத்தில் பெற்றோர் அவருக்கு ஒரு சைக்கிளை பரிசாக வாங்கிக் கொடுத்திருந்தனர். இந்த சைக்கிளை ஓட்டியவாறு சந்தைக்குச் சென்றிருந்தார் முஹம்மத் அலி. சந்தையில், இந்த சைக்கிளை ஒருவன் திருடி விடுகிறான். கோபம் கொண்ட முஹம்மத் அலி, திருடியவன் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்ததோடு, திருடனைத்தேடி அடிப்பதாகவும் கடிந்து கொண்டார். இந்த சம்பவம் நடக்கும்போது, ஜோ மார்டின் என்ற பொலிஸ் அதிகாரி கடமையிலிருந்தார். சிறுவன் முஹம்மத் அலியை அணுகிய அவர், திருடனைத் தேடி அடிக்கும் முன்னர், எப்படி சண்டையிடுவது என்று கற்றுக் கொள்ளுமாறு முஹம்மத் அலிக்கு ஆலோசனை வழங்கினார். ஈற்றில், ஜோ மார்டினே முஹம்மத் அலியின் முதலாவது குத்துச் சண்டை பயிற்றுவிப்பாளராகவும் மாறினார்.

22 ஆம் வயதில் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் தன்னுடைய பெயரை முஹம்மத் அலி என மாற்றிக் கொண்டார். இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும் குறிப்பாக, கறுப்பின மக்களின் விடிவிற்காகவும் அயராது பாடுபட்டவராக முஹம்மத் அலி கருதப்படுகிறார். முஹம்மத் தமாசி என்ற எழுத்தாளர் தன்னுடைய 'Acceptance of Islam by great personalities and thinkers' என்ற நூலில் முஹம்மத் அலியைப் பற்றியும் எழுதியுள்ளார். அதில் ஓர் இடத்தில் அமெரிக்கர்கள் இருபது இலட்சம் பேர் இஸ்லாத்தில் இணைவதற்கு முஹம்மத் அலி முயற்சிகளை மேற்கொண்டார் என குறிப்பிட்டுள்ளார்.

### குத்துச் சண்டையில் குதித்தார்

குத்துச் சண்டையில் அதிக ஆர்வம் காட்டிய முஹம்மத் அலி, 18 வயதாகும்போதே - 1960 இல் ரோமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ரோமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் குத்துச் சண்டைப் போட்டியில் பங்குபற்றிய அவர், தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டார். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துச் சண்டை உலகம் முஹம்மத் அலியை அப்போது, சாதாரணமான ஒரு தொழில்முறை குத்துச் சண்டை வீரராகவே பார்த்தது. 1965 பெப்ரவரி 25 ஆம் திகதி முஹம்மத் அலியின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை நாளாக அமைந்தது. அன்றுதான் சோனி லிஸ்டன் என்ற (ஆபத்தான வீரர் என்றறியப்பட்டவர்) முதல் நிலை குத்துச் சண்டை வீரரை தன்னுடைய 7 ஆவது சுற்றில் நுட்பமான குத்துக்களால் வீழ்த்தினார். இதையடுத்து, உலக ஹெவி வெய்ட் குத்துச்சண்டை சாம்பியன் விருது முதன் முதலாக அலியின் கைக்கு வந்து சேர்ந்தது. அலியை எப்படியும் வீழ்த்த வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டு தீவிர பயிற்சியை மேற்கொண்ட சோனி லிஸ்டன் மீண்டும் ஒருமுறை அலியை களத்தில் சந்தித்தார். ஆனால், அதிக வேலை வைக்காமல் முதல் சுற்றிலேயே சோனி லிஸ்டனை நொக்-அவுட் முறையில் வீழ்த்தினார் முகமது அலி. குத்துச் சண்டை விளையாட்டுத் துறையில் சர்வதேச ரீதியில் பிரகாசித்ததன் காரணமாகவே அவருக்கு தி கிரேட்டஸ்ட், தி சாம்ப், தி லூயிஸ் வில் லி லிப் போன்ற சிறப்புப் பட்டங்கள் கிடைத்தன.




**பறிபோன பதக்கம்**

1967 இல் அமெரிக்கா நடத்திய வியட்நாம் போரில் கலந்து கொள்ள தம் இளம் குடிமக்களை அமெரிக்க அரசு கட்டாயப்படுத்திய பொழுது, போருக்கு செல்வதற்காக அழைப்பு வந்தபோது முஹம்மத் அலி தன்னுடைய வீரம் செறிந்த கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்:

''வியட்நாமில் என் சகோதரன், என் சில இருண்ட மக்கள், சேற்றில் வாழும் சில பசித்த ஏழை மக்கள் ஆகியோரை பெரிய சக்தி வாய்ந்த அமெரிக்காவிற்காக சுட்டுக் கொல்ல என் மனசாட்சி என்னை அனுமதிக்காது. எதற்காக அவர்களை சுட்டுக் கொல்ல வேண்டும்...? என்னை அவர்கள் ஒருபோதும் நீக்ரோ என்றழைத்தது கிடையாதே. அவர்கள் என்னை விசாரணையின்றி ஒருபோதும் அடித்து மிதித்துக் கொலை செய்ய முயன்றது கிடையாதே. அவர்கள் என் மீது எந்த நாய்களையும் ஏவி கடிக்க விடவில்லையே. அவர்கள் என்னிடமிருந்து எனது குடியுரிமையை திருடவில்லையே. அவர்கள் என் தந்தையை கொல்லவில்லை; என் தாயை பாலியல் வல்லுறவு செய்யவில்லை. இந்நிலையில், நான் எப்படித்தான் அந்த ஏழை மக்களை சுட முடியும்...? என்னால் போருக்கு போகவியலாது. இதற்காக நான் சிறை செல்லவும் தயார்...''

என அமெரிக்க அரசுக்கு எதிராக முழக்கமிட்டார். விளைவாக 5 வருட சிறை தண்டனையும் 10,000 அமெரிக்க டொலர் அபராதமும் விதிக்கப்பட்டன. அத்தோடு, அவர் வென்ற பதக்கங்கள், வெற்றிக் கேடயங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. மேலும், எல்லா அமெரிக்க மாகாணங்களிலும் அவருக்கான குத்துச் சண்டை உரிமம் மறுக்கப்பட்டு அவர் போட்டியிட தடை விதிக்கப்பட்டது. 1967 முதல் 1970 வரை உலகில் நடந்த எந்த ஒரு போட்டியிலும் கலந்து கொள்ள முடியாமல் போனது. பின்பு 1971 ஆம் ஆண்டு பல்வேறு முறையீடுகளுக்கு பிறகு, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தினால் அவர் மீதான தண்டனை நீக்கப்பட்டது.


**வெற்றியும் தோல்வியும்**

முதலில் மோதி தோல்வியைக் கொடுத்த லியோன் ஸ்பிங்ஸ் என்ற வீரரை சில ஆண்டுகள் இடைவெளியில் மீண்டும் களத்தில் சந்தித்து மூன்றாவது முறையாக உலக சாம்பியன் விருதைக் கைப்பற்றினார் அலி. நான்காவது முறையும் அதே பட்டத்தை தக்க வைத்துக் கொள்ள லாறி ஹோம்ஸ் என்ற மனித மலையுடன் மோதி தோல்வியைத் தழுவினார். தன்னை தோற்கடித்தவர்களையே மீண்டும் தோற்கடித்து ஒவ்வொரு வெற்றியும், முயற்சியாலும் பயிற்சியாலும் மட்டுமே சாத்தியப்படும்; வெற்றி என்பது எவர் ஒருவருக்கும் தனிப்பட்ட சொத்தல்ல என்று வெற்றி மேடையிலேயே வெளிப்படையாக அறிவித்து பதக்கத்தை முத்தமிட்டவர் அலி.

இதன் பின்னரே அலிக்கு 'தி கிரேட்டஸ்ட்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அலியின் வாழ்க்கையை மையமாக வைத்து 'தி கிரேட்டஸ்ட்' என்ற சினிமாப் படமும் இதன் பின்னர் வெளியாகி அவர் புகழைப் பரப்பியது. தன்னுடைய வாழ்நாளில் 61 முறைகள் மேடையேறி குத்துச் சண்டை போட்ட அலி, அவற்றில் 56 முறைகள் வெற்றிகளைக் கண்டார். இதில் ஐந்து முறைகள்தான் தோல்வியை சந்தித்தார். கலிபோர்னியாவின் ஹொலிவுட்டில் பிரபலங்களின் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொறிக்கப்பட்ட நடைபாதையில் (Walk of fame) மொஹம்மத் அலியின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவரது பெயர் மட்டும் நிலத்தில் அன்றி சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. முஹம்மது நபிகளின் பெயரையும் முஹம்மத் அலியையும் இழிவுபடுத்தும் பொருட்டு தவறியும் அதை மிதித்து விடக்கூடாது என்றே அதனை நிலத்தில் வைக்க அலி மறுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

**வெற்றிக்கு காரணம் என்ன?**

ஒருமுறை முஹம்மது அலியிடம், ''புதிதாய் களம் வரும் வீரர்களுக்கு ஏதாவது சொல்லுங்களேன்'' என ஊடகங்கள் வினவின. அதற்கு பதிலளித்த அலி, ''வீரர்கள் உடற்பயிற்சிக் கூடங்களில் மட்டுமே உருவாக முடியாது. அவர்களுக்கு ஆழ்மனதில் ஒரு கனவு, ஒரு தொலைநோக்கு, ஒரு விருப்பம் இருக்க வேண்டும். அதேபோல், அவர்களுக்கு திறமையும் முக்கியம்; மனோதிடமும் முக்கியம். தன்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை கலந்த உணர்வு எப்போதும் உள்ளத்தில் ஆழமாக இருக்க வேண்டும். அதுவே ஒரு வீரனை வெற்றியின்பால் இயக்கும்'' என்றார்.

'ஃபவுல் பன்ச்' எனப்படும் விதிமுறைகளை மீறிய குத்துக்களை எதிராளி மீது விடுவதும், எதிராளியை ஏமாற்றி குத்துவதும், களைப்பாகி விட்டது போல் நடித்து மவுத் காரட்டை (பற்கள், தாடைகளின் பாதுகாப்புக்காக வாய்க்குள் பொருத்தப்படும் ரப்பர் தட்டை) கீழே துப்புவதும் போன்ற விரும்பத்தகாத செயல்களை தன்னுடைய வாழ்நாளில் எப்போதும் செய்யாத 'டீஸன்ட்சி - பாக்ஸர்' என்ற நற்பெயர் அலிக்கு இருந்ததால்தான் அவரை உலகம் முழுவதும் குத்துச் சண்டை ரசிகர்கள் மட்டுமல்ல, குத்துச் சண்டை வீரர்களும் ஒரு முன்மாதிரிமிக்க வீரராக போற்றுகின்றனர்.

**விளையாட்டுத் துறைக்கு அப்பால்...**

முஹம்மத் அலிக்கு இருந்த செல்வாக்கு, கௌரவம் என்பன அவரை நாட்டினுள் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் ஒரு முன்மாதிரிமிக்க மனிதராக மாற்றியது. 1980 இல் மொஸ்கோவில் நடைபெறவிருந்த ஒலிம்பிக் போட்டியை புறக்கணிப்பதற்காக, ஆபிரிக்க நாடுகளை வசப்படுத்தும் பணியில் ஈடுபடுவதற்காக, அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி கார்டர் முஹம்மத் அலி ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பப்பட்டார். சதாம் ஹுஸைன் குவைத்தை அரசாண்டபோது, பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த அமெரிக்கர்களை விடுதலை செய்வதற்கான இராஜதந்திரப் பணியிலும் முஹம்மத் அலி ஈடுபட்டிருந்தார். இதற்காக ஈராக் சென்று 15 அமெரிக்க பணயக் கைதிகளை விடுதலை செய்து அழைத்து வந்தார்.

குத்துச் சண்டையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் சமூக சேவையில் அதிக நாட்டம் காட்டத் தொடங்கிய முஹம்மத் அலி, வட கொரியா, ஆப்கானிஸ்தான், கியுபா போன்ற நாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுவராகப் பயணம் மேற்கொண்டார். கியுபாவுக்கு ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகளையும் கையளித்திருந்தார். 1990 இல் அமெரிக்காவின் லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் நெல்சன் மண்டேலாவை சந்தித்த முஹம்மத் அலி, அவர் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்.

**நோயும் மரணமும்**

1980 களின் ஆரம்பத்தில் நடுக்குவாதம் அல்லது பார்கின்சன் நோய் (Parkinson's disease) அல்லது பீ.டி என அழைக்கப்படும் நோயினால் பீடிக்கப்பட்டார். இந்நோயானது மைய நரம்பு மண்டலத்தைச் சிதைக்கின்ற ஒரு நோயாகும். பொதுவாக இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இயக்கத் திறன்கள், பேச்சு மற்றும் மற்ற செயற்பாடுகள் சீராக இயங்க மாட்டாது. மூளையின் தொழிற்பாடுகளில் ஒன்றாகிய உடலியக்கங்களை ஒருங்கிணைத்தல் பாதிப்படைவதால் இந் நோய் ஏற்படுகின்றது. மேற்படி பாரகின்சன் என்ற நோய்க்கான அறிகுறிகள் முஹம்மத் அலியில் தெரியத் தொடங்கியபோதும் தனது ஓயாத சமூகப் போராட்டத்தை முடித்துக் கொள்ள விரும்பாத முஹம்மத் அலி, அனைத்துத் தளங்களிலும் இயங்கி வந்தார்.

1984 ஆம் ஆண்டு தனது 43 ஆவது வயதில் முஹம்மத் அலி பாகின்ஸன் நோயினால் கடுமையாக பீடிக்கப்பட்டார். தொடர்ந்தும் நோய்வாய்ப்பட்டிருந்தவர் அரிசோனா மாநிலத்தின் பீனிக்ஸ் நகரில் 03.06.2016 அன்று தனது 74 ஆவது வயதில் காலமானார். எல்லாம் வல்ல இறைவன் இவரைப் பொருந்திக் கொள்வானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கடந்துபோன பொழுதுகள்

மனதிலே இனிமையும் உடலுக்கு சுகத்தையும் தரும் கனவுகளில் இருந்து விடைபெற முனையும் இரவின் இருளை சூரியனின் ஒளிக்கிரணங்கள் ஊடறுக்கும்; பறவைகளின் இன்னிசை மெல்ல மெல்ல நிசப்த விடியலைக் கலைக்க முனையும்; எல்லோர் மனதையும் கொள்ளை கொள்ளும் அந்த இனிய காலைப் பொழுது ஏனோ சிவாவின் மனதில் சிறு சலனத்தையேனும் ஏற்படுத்தவில்லை.

என்றும்போல் அவனது நினைவலைகள் அவனைத் தழுவிச் செல்கின்றன. அவனது வீட்டிற்குச் சற்றுத் தூரத்திலுள்ள மலையின் முகட்டில் அவனது கடந்த காலம் எட்டிப் பார்த்து எள்ளி நகையாடுவது போன்ற பிரமையில் மலை முகட்டை வெறித்து நோக்கும்போது அவனை வெட்டி நோக்கியது அவனது மனம்...

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்...

''டேய் கரீம்... கண் பிதுங்கி கீழே விழப் போவுதுடா, நீ படிக்கிற படிப்பில்...''

என்று மடிப்புக் கசங்காத பாடசாலை உடையுடன் சிவா கூற, அவனுக்கு ஜால்ரா அடிக்கும் அவனது சகபாடிகள் கொல்லெனச் சிரித்தனர். கரீமுக்கு மனது கஷ்டமாக இருந்தபோதும் வெளியே,

''இல்லை சிவா, எக்ஸாம் வருதில... படிக்கணும் அதான்''

என்று கூறி, மேலும் சிவா இடக்கு பேசுமுன் கரீம் புத்தகத்தோடு வெளியே படிப்பதற்கு சென்றுவிட்டான்.

சிவா இப்படித்தான் படிப்பில் பொடுபோக்குத்தனம் மட்டுமல்ல, படிக்கும் மாணவர்களை கிண்டல் செய்வதும் கேவலமாய்ப் பேசுவதும் அவனுக்கு கைவந்த கலை. தந்தையின் செல்வம் மகனின் அடாவடித்தனத்திற்கு ஒத்து ஊதுகிறது.

அன்றும் அப்படித்தான்;

ஸயன்ஸ் பாடத்திலே ஆசிரியர் மூலகப் பாகுபாடு கற்பித்துக் கொண்டிருக்கையில் அவன் கவனமெடுக்காததோடு படிக்கும் மாணவனொருவனை குழப்பிக் கொண்டிருந்தான். உடனே ஆசிரியர்,

''சிவா எழுந்திரு பார்ப்பம். இப்ப நான் என்ன சொன்னேன்டு சொல்லு...''

எனக் கூற, அவன் அலட்சியமாக எழுந்து நின்றானே தவிர பதிலேதும் கூறவில்லை.

ஆசிரியர் இரண்டு மூன்று தரம் கேட்டதும் ''தெரியா'' என்று நமுட்டுச் சிரிப்புடன் சிவ கூற, ஆசிரியருக்கோ கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''சிவா நீ இப்படித்தான் வர வர மோசம். இப்படியே நீ இரி, எக்ஸாம்ல பெயிலாவினா தெரியும். அப்பத்தான் வெளங்கும். படிச்சாத்தான் முன்னேறலாம்... நீயும் படிக்க மாட்டே, படிக்கிற புள்ளகளயாவது கெடுக்காம இரி'' என்று எச்சரித்தார்.


பாடம் முடிந்து ஆசிரியர் சென்றதும்,

''சிவா, நீ செய்வது சரியில்ல. டீச்சர்கிட்ட மரியாதயா பேசு''

என்று கூறினான் கரீம். அதற்கு சிவாவோ,

''நீ படிச்சு பெரிய கலெக்டர் ஆவ போறன்டு நெனப்பு. ஊத்தபுடிச்ச உடுப்போட வார... ஒனக்கு இதெல்லாம் தேவதான். நான் ஏன் படிக்கனும். இந்தக் காலத்துல பணமிருந்தா எல்லாம் வரும்''

என்று மட்டம் தட்டிப் பேசினான்.



எம்.டீ.எப். நுஸ்லா
மா/மின்ஹாஜ் மு.ம.வி.
நிககொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரீமுக்கு தன் ஏழ்மையை சுட்டிக் காட்டியது வேதனையைத் தந்தாலும், அவனுடைய உதாசீனத்தை சும்மாவிட மனமில்லாததால்,

''பணமிருந்தா எல்லாம் வரும்தான். ஆனா படிப்ப வாங்க ஏலுமா? பணத்தோட படிப்புக் கூட இருந்தாத்தான் மதிப்பு''

என்று அமைதியாகவே கூறினான். ஆனால், சிவாவோ கரீமோடு சண்டைக்கே சென்றுவிட்டான்.

சிவா வீட்டில் ஒரே பிள்ளை. அதிக செல்வம் அவனைக் கேட்பதற்கு யாருமில்லை. தாய், தந்தை படிக்கும்படி கூறினால் உடனே புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்வான்.

வழமைபோல ஸ்பெஷல் கிளாஸ் என்று பொய் சொல்லிவிட்டு ஊரெல்லாம் சுற்றிவிட்டு குதூகலத்துடன் வீடு சென்றவனுக்கு அவனது மனோநிலைக்கு எதிராய் வீடு இருந்தது. ஆம், அன்றுதான் அவனது வாழ்க்கைப் பாதையை மாற்றிய நாள்!

தந்தை கட்டிலில் மூச்சுக்கே திணறிக் கொண்டிருக்க, தாய் அழுதபடி கட்டில் அருகில் அமர்ந்திருந்தாள். சூழ ஊர் மக்கள்.

அவன் நிலைமையை ஊகிக்கும் முன்னமே அவனது தாய் ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள்.

எல்லாமே முடிந்துவிட்டன.

ஆம், அவனது வாழ்வில் எல்லாம்தான் முடிந்துவிட்டன. தந்தையின் இறுதிச் சடங்குகள் முடிந்த கையோடு தந்தையின் சக தொழில் நண்பர்கள் கூறிய செய்தியோ அதைவிடப் பயங்கரம்!

ஒரே ஒரு வார்த்தைதான்.

''பறிமுதல்'' தந்தையின் கடனுக்காக சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

முதலில் அவன் கௌரவம் பார்த்து தயங்கியபோதும் சாப்பாட்டுக்காகவேனும் உழைக்க வேண்டும் என்று தீர்மானித்து வேலை தேடினான். படிப்பு போதாது என்ற காரணத்தையே எல்லோரும் கூற அவன் ஆடிப் போனான்.

சரி, சற்று நிலையிறங்கி சாதாரண கடைகளில் ஏதாவது எழுந்து வேலைகள் பார்ப்போம் என்றால் கால் நோகவும் கால் கடுக்கவும் காத்திருந்ததுதான் மிச்சம்.

கடை முதலாளிமார்கள் அனைவரும் கேட்ட கேள்வி இதுதான்,

''தம்பி ஒன்ட ஓலெவல் ரிசல்ட் என்னப்பா? ஏன்னா கணக்கு வழக்கு பார்க்கணுமில்ல. தெரிஞ்சாதானே நல்லது'' எனக் கேட்க, பதில் சொல்லத் தெரியாது திகைத்தான்.

என்னவென்று சொல்லுவான்?

அலட்சியமாகப் படிக்காமல் பரீட்சை எழுதியதன் விளைவு பத்துப் பாடங்களும் பெயிலாகியதுதான் மிச்சம். தந்தை இறந்த சோகம், சொத்து பறிமுதல், எக்ஸேம் ரிசல்ட் என அடுத்தடுத்து தாக்கும் குண்டு வீச்சுப்போல் அவனைத் தாக்க, நிலை கொள்ளாமல் தவித்தான்.

பசித்தால் புலியும் புல் தின்னும் என்பதுபோல கடைசியில் மானத்தை விட்டு, மூட்டைத் தூக்கும் தொழிலில் ஈடுபட்டான். அப்போதும், வேலை பழக்கமின்மையால் அவன் கேட்ட ஏச்சுக்கள்... அவமானங்கள்... அப்பப்பா...!

''எருமை... இப்படிச் செய்யாதண்டு எத்தன தரம் சொல்றது. அறிவில்லாத மட்டிகள். படிச்சாத்தானே அறிவு வரும். அது சரி, படிச்சிருந்தா நீயெல்லாம் ஏன் இங்க வாற...''

என்ற ஏச்சுக்களில் கதிகலங்கி, அன்று நின்றான். இப்போது பழகிவிட்டது. ஆனால், வேதனைதான் மாறவில்லை.

தன்னுடைய தந்தை இதுபோல எத்தனை பேருக்கு வேலை கொடுத்திருப்பார் என்று நினைக்கும்போது மூச்சு முட்டியது.

எப்படியோ உயிர் நோக, கை கால்கள் துவண்டு போக மூடை சுமந்து கூலிக்கு மாரடித்து கிடைக்கும் சொற்ப பணத்தில் அரை வயிறாவது குடித்து தாயும் மகனும் வாழ்ந்தனர்.

சில நாட்களில் அதுவும் இல்லாமல்...

இப்படியே கடந்த கால நினைவுகளில் இருந்து மெல்ல சுயநினைவுக்கு வந்தான்.

கனத்த மனதுடன் பாதையில் இறங்கி நடக்கும்போது அவனைத் தாண்டிச் சென்ற பள்ளிச் சிறார்களைக் கண்டபோது, இவர்களிலும் எத்தனை சிவாக்கள் இருக்கிறார்களோ? வேண்டாம்... வேண்டவே வேண்டாம். என்னைப்போல் ஒருவரும் ஆக வேண்டாம்... என்று நினைத்துக் கொண்டான்.

அவ்வேளை, அவனைத் தாண்டி ஒரு கார் சென்றது. அது அவனுடன் படித்த கரீமுடைய கார். இன்று அவனொரு டாக்டர். அவனுக்குத் தான் செய்த அவமானங்கள் நினைவுக்கு வந்தன.

இன்று மடிப்பு கசங்காத உடையுடனும் அழுக்குப் படியாத காருடனும் கரீம் செல்கிறான். சிவாவோ தன்னைப் பார்க்கிறான். அழுக்குப் பிடித்த உடையுடன் காணப்படும் தன்னைப் பார்த்தே அவனுக்குப் பழகிவிட்டதுபோல்.

கரீமின் ஹோர்ன் ஒலி சிவாவுக்கு,

''படிப்பு இருந்தாத்தான் மதிப்பு, பார்த்தியா?'' என்று கூறுவது போல் இருந்தது.

அருகில் கேட்ட இன்னுமொரு வாகனத்தில் ஹோர்ன் ஒலி அவனை நினைவுக்குக் கொண்டு வந்தது. கடந்துபோன பொழுதுகள் மனதை வாட்ட...


''இன்றும் அந்த கடையில் கூலிக்கு ஆள் எடுப்பாங்களோ தெரியா''

என்று வாய் தானாக முணுமுணுக்க கனத்த நெஞ்சுடன் நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கை மூலிகை மூலங்களைப் பயன்படுத்தி அன்றாட வாழ்க்கையில் மனிதனது சருமத்தில் ஏற்படக்கூடிய சரும நோய்களுக்கு தீர்வு காணும் வகையில் ஆயுர்வேத மருத்துவ பசை ஒன்றை கண்டுபிடித்து, 2013 ஆம் ஆண்டு இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய புத்தாக்க கண்காட்சியில் கலந்து கொண்டு வெற்றியீட்டி, 2014 ஆம் ஆண்டு புத்தாக்க ஆணைக்குழுவினால் சர்வதேச மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு போட்டியில் கலந்து சாதனை படைத்து, தற்போது ஸகீ ஹேர்பல் என்ற ஒரு தனியார் நிறுவனத்தை நடத்தி வரும் ஸகீ லதீப் என்ற சாதனையாளரை அகரம் சந்தித்தது. அவருடனான உரையாடலை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

# "முயற்சிப் போராட்டமே எனக்கு வெற்றியைத் தந்தது"

**நேர்காணல்: அப்பாஸ் (இர்பானி)**
**வ. முஹம்மத் நபீல்**

**உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தைத் தாருங்கள்...**

எனது பெயர் என்.டீ.எம். ஸகீ லதீப். எனக்கு 21 வயது. எனது கல்விப் பயணத்தை குருணாகல் முதுந்துவ மடிகே வித்தியாலயத்தில் ஆரம்பித்தேன். தொடர்ந்து உயர் கல்வியை வணிகப் பிரிவில் கற்றேன். எனது தந்தையின் பெயர் ஸரூக், தாய் ஜைனு. 12 வயதாக இருக்கும்போது எனது தாய் மரணித்துவிட்டார். அன்றிலிருந்து எனது தந்தையின் சகோதரியான ரஸானா அவர்கள்தான் என்னையும் எனது ஒரே சகோதரியான சகீகாவையும் அன்புடன் பராமரித்து, அரவணைத்து வருகிறார். தற்போது எனது சொந்த ஊரான குருணாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ எனும் பிரதேசத்திலுள்ள தேதிலியங்க எனும் கிராமத்தில் வசித்து வருகிறேன்.

**உங்களது கண்டுபிடிப்பைப் பற்றிக் கூற முடியுமா?**

எமது சூழலில் காணக்கூடிய இயற்கை மூலிகை மூலங்களைப் பயன்படுத்தி அன்றாட வாழ்க்கையில் மனிதனது சருமத்தில் ஏற்படக்கூடிய சரும நோய்களுக்கு தீர்வு காணும் வகையில் ஆயுர்வேத மருத்துவ பசை ஒன்றை என்னால் கண்டுபிடிக்க முடியுமாக இருந்தது. இந்தக் கண்டுபிடிப்பின் விளைவால் பெறப்பட்ட இப்பசையானது மனிதனுக்கு சதா அல்லது விட்டு விட்டு தாக்குகின்ற நோய்களான நகச்சுற்று, கால்களில் ஏற்படக்கூடிய வெடிப்பு, தழும்புகள், விரல்களுக்கு இடையில் ஏற்படும் புண், சொறி, சிரங்கு, முகப்பருக்கள், பூச்சிக் கடிகள், தேமல் மற்றும் கழுத்து, இடுப்பு, கக்கம் போன்ற இடங்களில் ஏற்படக்கூடிய கறுப்பு - சாம்பல் நிற மாற்றம் போன்ற சரும வியாதிகளுக்கு எவ்வித பக்கவிளைவும் இன்றி குறைந்த காலத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில்தான் காணப்படுகின்றது.

**இந்தக் கண்டுபிடிப்புக்கு உங்களுக்கு ஆர்வமூட்டிய காரணிகள் எவை?**

சிறுவயதில் இருந்து ஒரு வைத்தியனாக அல்லது ஒரு விஞ்ஞானியாக வர வேண்டும் என்பதுதான் எனது கனவாக இருந்தது. அந்த நிலையை அடைய முடியாவிட்டாலும் அது சார்ந்த ஏதேனும் விடயத்தை சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமும் உற்சாகமும்தான் நான் இந்நிலைக்கு வர முதன்மைக் காரணம் என நான் நினைக்கின்றேன். அதேபோன்று, நான் சிறு வயது முதல் பத்திரிகையில் வரக்கூடிய வைத்திய ஆலோச னைகள், சரும நோய்களுக்கான தீர்வுகள் போன்ற விடயங்களை அதிகமாக வாசிப்பதுடன் அந்த ஆக்கங்களை சேகரித்தும் வந்தேன். அந்த வாசிப்பும் சேகரிப்பும் இறுதியில் எனக்கு நல்லதொரு முடிவை பெற்றுத் தந்தது, அல்ஹம்துலில்லாஹ்.

அதாவது, தற்போது சந்தையில் விற்பனையில் உள்ள அனைத்து மருத்துவ பசைகளும் மனிதனது சருமத்தில் ஏதேனும் ஒரு பக்க விளைவை ஏற்படுத்துவதை அல்லது பூரண குணத்தைக் கொடுக்க முடியாதுள்ளதை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொண்டேன். இதற்கு என்னால் என்ன செய்ய முடியும் என்ற யோசனைதான் எனது கண்டுபிடிப்புக்கு காரணமாக அமைந்தது. பல தோல்விகளை சந்தித்தாலும் தொடர்ந்து நான் மேற்கொண்ட முயற்சிப் போராட்டமே எனக்கு இந்த வெற்றியை பெற்றுத் தந்தது. தோமஸ் அல்வா எடிசனைப்போல எனது வாழ்வின் ஒவ்வொரு தோல்வியும் எனக்கு ஒவ்வொரு படிப்பினையைக் கற்றுத் தந்தது.

**உங்களது அடைவுகள் பற்றிக் கூறங்கள்**

ஆம், முதலில் எனக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் இருவரின் வழிகாட்டல்கள் மூலமாக இந்தக் கண்டுபிடிப்பை மகரகமையிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வு நிறுவகத்தில் பரிசோதனைக்காக அங்கீகாரத்தைப் பெற்று, உள்நாட்டு மருத்துவ நிறுவகம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் யூனானி பிரிவுக்கு சமர்ப்பித்து, எனது தயாரிப்பானது மனிதனது சருமத்துக்கு எவ்வித பக்க விளைவையும் ஏற்படுத்த மாட்டாது என்பதற்கான தரச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டேன். 2013 ஆம் ஆண்டு இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய புத்தாக்க கண்காட்சிக்கு எனக்கும் அழைப்பிதழ் கிடைத்தது. அங்கு நான் சென்றபோதுதான் ஊடகங்கள் என்னை இவ்வுலகிற்கு படம்பிடித்துக் காட்டத் துவங்கின. சுமார் ஆயிரம் போட்டியாளர்கள் கலந்து கொண்டதில், சிறந்தவர்களாக 68 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் வெற்றி பேற்றவர்களுக்கான, 2014 ஆம் ஆண்டு புத்தாக்க ஆணைக்குழுவினால் சர்வதேச மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு போட்டியில் கலந்து கொண்டேன். இப்போட்டியானது இலங்கைக்கு வருமானத்தை பெற்றுத் தரும் ஒரு போட்டியாக இருந்தமை பெருமைக்குரிய விடயமாகும். இப்போட்டியில் முதலாமிடம் பெற்ற எனக்கு எனது தாயரிப்பை சந்தைப்படுத்த, முதலீடாக 12 மில்லியன் ரூபா பணம் கிடைக்கப் பெற்றது. ஒரு கண்டுபிடிப்புக்காக இலங்கை நாட்டு இளம் கண்பிடிப்பாளர் ஒருவருக்கு முதன் முதலில் கிடைத்த மிகப் பெரிய முதலீட்டுத் தோகை இதுவாகும். என்னால் தற்போது ஸகீ ஹேர்பல் என்ற ஒரு தனியார் நிறுவனத்தை நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

**இளைஞர் சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**


இன்று எமது சமூகத்தில் பெரும்பாலானவர்கள் தான் நல்ல முறையில் கல்வி கற்று சிறந்த தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில்தான் இருக்கிறார்கள். அவ்வாறின்றி, பெற்ற கல்வியினால் தானும் தனது நாடும் சிறந்த பலனைப் பெற வேண்டும் என்ற உயர்ந்த அவா எம்மில் காணப்பட வேண்டும். அதேபோன்று, மாணவர்களாகிய நீங்கள் தங்களுக்கென்று ஓர் உயர்ந்த இலக்கை வகுத்துக் கொள்ளுங்கள். அந்த இலக்கை அடைவதற்கு ஒரு திட்டத்தை அமைக்க வேண்டும். அந்த திட்டத்தை செயற்படுத்துகின்றபோது வருகின்ற சவால்களுக்கு ஆரோக்கியமான முறையில் விடா முயற்சி செய்து வெற்றி கொள்வதன் மூலமாக வாழ்வில் முன்னேற முடியும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

**உங்கள் எதிர்கால இலக்கு என்ன?**

சர்வதேச அளவில் எனது கண்டுபிடிப்பைக் கொண்டு செல்ல வேண்டும் என்பது எனது இலக்காகும். இதுபோன்று, தொடர்ந்தும் கண்டுபிடிக்க வேண்டும் என்பதையும் இலக்காக வைத்திருக்கிறேன். அதற்கு உதவியாக இப்போது ஆயுர்வேத மருத்துவத்தில் டிப்ளோமா கற்கைநெறி ஒன்றையும் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

**இத்தருணத்தில் யார் யாருக்கு நன்றி கூற விரும்புகிறீர்கள்?**

முதலில் இந்தப் பாக்கியத்தை அடைய அருள்பாலித்த அல்லாஹ்வுக்கு நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன். அடுத்ததாக, எனது குடும்பத்தினர், எனக்கு வழிகாட்டிகளாக இருந்த றிம்ஸியா மற்றும் பரீஹா ஆசிரியைகளுக்கும் நன்றியை தெரிவிக்கிறேன். மேலும், எனக்கு பொருளாதார உதவிகளை செய்த அனைவரையும் ஞாபகமூட்டுவதுடன் எனது தந்தையின் சகோதரியான மருத்துவர் ரஸானா அவர்களுக்கு விசேடமாக நன்றி கூறுவதுடன் குறிப்பாக, எனதும் எனது சகோதரியினதும் கல்வியில் பங்களிப்புச் செய்து கொண்டிருக்கும் அகரம் சஞ்சிகைக்கும் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு விமானமும் விழுந்தது




காணாமல் போகும் விமானங்கள் பட்டியலில் எகிப்து எயார் எம்.என். 804 விமானமும் சேர்ந்துள்ளது. மே 09 ஆம் திகதி பாரிஸ் நகரிலிருந்து எகிப்தின் கெய்ரோ நகருக்கு 66 பயணிகளுடன் பயணித்த இந்த விமானம் மத்திய தரைக் கடலில் விழுந்துள்ளது.


இதேநேரம், எரிகல் சிதறல் ஒன்றினால்தான் இந்த விமானம் தாக்கப்பட்டுள்ளது என ரஷ்ய விண்வெளி நிபுணர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

# வெடித்துச் சிதறிய இராணுவக் களஞ்சியம்



கொஸ்கம - சாலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில் இடம்பெற்ற வெடி விபத்தினால் இராணுவத்தினருக்கு 500 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக இராணுவம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தேவைக்கு அதிகமாக இருந்த பெருந்தொகையான ஆட்லறி, பல்குழல் பீரங்கி குண்டுகள் போன்றவை அவற்றை வழங்கிய நிறுவனங்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட இருந்த நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. அனர்த்தம் நடந்ததன் பின்னால் கொஸ்கம சாலாவ பிரதேசம் அணுகுண்டுகள் வீசப்பட்ட ஹிரோஷிமா நகரைப் போல பொசுங்கிப் போயிருந்தது என ஊடகங்கள் வர்ணித்தன.





தொகுப்பு:
வ. முஹம்மத் நபீல்

# கொலைகார நத்தைகள்



மனிதனுக்கு சவாலாக அமையும் சிற்றுயிர் வகைகளில் நத்தைகளும் இப்போது இடம் பிடித்துள்ளன. வெப்பமண்டல நாடுகள் மற்றும் மித வெப்பமண்டல நாடுகளில் தண்ணீரில் காணப்படும் நத்தைகள் சிஸ்டோஸோமியாஸ் எனும் குடல், சிறுநீர் பகுதிகளைப் பாதிக்கும் நோய்களை ஏற்படுத்துகின்றன. இதனால் வருடந்தோறும் சர்வதேச அளவில் 200,000 பேரளவில் மரணிக்கின்றனர்.

# புகை எனும் வதை




உலக புகைத்தலற்ற தினம் வருடந்தோறும் மே 31 அனுஷ்டிக்கப்படுகின்றது. 16-20 வயதிற்கு இடைப்பட்டவர்கள்தான் 55 வீதம் புகைத்தலுக்கு அடிமையாக உள்ளனர் என்ற அறிக்கை சமூகநலவாதிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. வருடாந்தம் 6 மில்லியன் மக்களின் இறப்பிற்கு காரணமாக அமையும் புகைத்தல் இப்போது யுவதிகளையும் தன்பால் ஈர்த்துக் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இந்த வருட புகைத்தல் எதிர்ப்பு தினத்தை சமூக ஊடகங்களே அதிகமாக பிரபலப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தொலைக்காட்சிகளுக்கு தடை

மக்கா, மதீனா நகரங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கும் நோக்கோடு அப்பகுதிகளில் இசை மற்றும் சினிமாக்களை ஒளிபரப்பும் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு தடை விதிக்க சஊதி அரேபியா அரசு முடிவெடுத்துள்ளது.

சென்ற வருடம் இதே தடையை மீறியமைக்காக ஓர் இலட்சம் சஊதி றியால்கள் தண்டப் பணமாக விதிக்கப்பட்டது. ஆனால், இவ்வருடம் ஒட்டுமொத்தமாக குறித்த தொலைக்காட்சி அலைவரிசைகளை மூட தேசிய மரபுரிமைக்கான சஊதி ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

## விநோத 'ஈ'



உலகின் மிகச் சிறிய உயிரினங்களுள் ஒன்றான 'ஈ' பல தொற்று நோய்களுக்கு அடிப்படைக் காரணியாக இருப்பது நாம் அறிந்ததே. இதேவேளை, ஆபிரிக்காவில் வாழும் சேட்ஸி ஈ எனும் விநோத ஈ பற்றிய தகவல்கள் இப்போது சுகாதார அமைப்புக்களால் வெளியிடப்பட்டுள்ளது.


சஹாரா பாலைவனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு ''டிரைபனோஸோமிடிசிஸ்'' என்ற உறக்க நோயை இந்த ஈ வகை பரப்பி, சென்ற ஆண்டில் மாத்திரம் 2000 மனிதர்களை கொன்றுள்ளது.

## அகதிகளின் அவலச் சாதனை

உலக வரலாற்றில் அதிகளவு அகதிகளைக் கொண்ட ஆண்டாக 2015 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. 63.3 மில்லியன் கொண்ட அகதிகள் சனத்தொகையானது நாளாந்தம் பெருகிக் கொண்டே செல்வதாக ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது. சென்ற வருடம் மாத்திரம் 5 மில்லியன் அகதிகள் உருவாகியுள்ளனர்.

உலக மொத்த சனத்தொகையில் 113 பேரில் ஒருவர் அகதியாவார். அவர்களில் 50% வீதமானவர்கள் சிரியா, ஆப்கானிஸ்தான், சோமாலியா கலவரங்களால் அகதிகளாக்கப்பட்டவர்கள்.

## உலகில் அதிவேகமான கணினி



வளர்ந்து வரும் கணினி யுகத்தில் முதலிடத்தைத் தக்கவைக்க நடக்கும் மும்முரமான போட்டிகளில் சீனா தற்போது கௌரவத்திற்குரிய இடமொன்றை அடைந்துள்ளது. உலகில் அதிவேகமான கணினி என சீனாவின் அதிசக்தி இயங்குதிறன் கொண்ட கணினி ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையாக சீனாவின் உதிரிப்பாகங்களால் உருவாக்கப்பட்ட இத்தகைய கணினிகள் வானிலை முன்னறிவிப்பு, அணு அயுதங்கள் தொடர்பான செயற்திட்டங்களுக்குரிய வேலைகளை துரிதமாக நிறைவேற்றுகின்றன.

## மிக வறுமையான ஜனாதிபதி

உலகின் மிக வறிய ஜனாதிபதி என்ற அடையாளம் முஹீகா உருகுவேயின் 40 ஆவது ஜனாதிபதியான (2010-2015) ஹோசேவிற்கு கிடைத்துள்ளது. இடதுசாரி தலைவரான இவர், ஜனாதிபதி மாளிகையை புறக்கணித்து விட்டு தன் தோட்டத்தில் அமைந்துள்ள சிறிய தொரு பண்ணை வீட்டிலேயே வாழ்ந்து வருகிறார்.

தனது பாதுகாப்பிற்காக வெறும் இரண்டு பாதுகாவலர்களுடன் வாழும் இவர் தனது சம்பளத்தில் 90 வீதமானவற்றை தர்மமும் செய்து விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐஸ்லாந்து
## ICELAND

ஐரோப்பாவிற்கும் கிறீன்லாந்துக்கும் இடையில் அமைந்துள்ளது அமைதி பூங்காவான ஐஸ்லாந்து. உலகின் அமைதி மிக்க சிறு எழில் தேசமாக அடையாளப் படுத்தப்படும் ஐஸ்லாந்து, வடக்கு அட்லாண்டிக் பெருங் கடலின் மிக முக்கிய தரிப்பிடமாகவும் விளங்குகின்றது. ஐஸ்லாந்து தீவு உட்பட இன்னும் சில குட்டித் தீவுகளை உள்ளடக்கியுள்ள ஐஸ்லாந்து, நோர்டிக் நாடுகளில் ஆகக் குறைந்த சனத்தொகை கொண்டதாகும்.



தலைநகர் - ரெய்க் யவிக்

| | |
|---|---|
| தேசிய மிருகம் | - வங்கப்புலி |
| ஆட்சி மொழி | - ஐஸ்லாந்தம் |
| மக்கள் | - ஐஸ்லாந்தர் |
| அரசாங்கம் | - அரசியலமைப்பு குடியரசு |
| குடியரசு தினம் | - *17 ஜூன் 1944* |
| பரப்பு | - *1,03,000* km$^2$ |
| மக்கள் தொகை | - *3,12,851 (2007)* |
| சுதந்திரம் | - *01.12.1918* (டென்மார்க்கிடம் இருந்து) |
| மொத்த வருடாந்த உற்பத்தி | - *12.172* பில்லியன் அமெரிக்க டொலர் |



அரச இலட்சினை



ஜனாதிபதி
ஓலஃபுர் கிறீம்ஸன்



பிரதமர்
கயர் ஹார்டே




தேசிய பறவை
Gyrfalcon



தேசிய மலர்
white dryas



தேசிய விளையாட்டு
Hand Ball



தேசிய கொடி




நாணயம் - ISK



தேசிய மிருகம்
வங்கப்புலி

❖ நீலக் கடல் நீரேரி (Blue Lagoon) ஐஸ்லாந்தின் மிக சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்று. இது ஓர் எரிமலை மூலம் உருவான ஒரு சூடான நீராவி பகுதியாகும். இந்த இடம் தென்மேற்கு ஐஸ்லாந்திலுள்ள ரேக்ஜேன்ஸ் தீபகற்பத்தில் கிரின்ட்விக் (Grindvik) என்னும் இடத்தில் ஒரு லாவா நிலத்தில் அமைந்துள்ளது. இதனருகில் ஒரு புவிவெப்ப மின் உற்பத்தி நிலையம் உள்ளது. இவ்விடம் செயற்கையாக உருவாக்கப்பட்டதாகும். சூடான நீரில் சிலிக்கா மற்றும் சல்பர் போன்ற கனிமங்கள் அதிகமாக உள்ளன. எனவே, சொரியாசிஸ் எனப்படும் தோல் நோயை இதன் நீர் குணப்படுத்த உதவுகிறது

❖ கி.பி. 874 ஆம் ஆண்டில்தான் மக்கள் ஐஸ்லாந்தில் குடியேற ஆரம்பித்தனர். இவர்களில் நோர்வே மற்றும் ஸ்காண்டி நேவியர்கள் அதிகம். *1262* ஆம் ஆண்டிலிருந்து *1918* ஆம் ஆண்டு வரை முதலில் நோர்வேயும், அடுத்து டென்மார்க்கும் ஐஸ்லாந்தை ஆண்டன. *1918* இல் இது சுதந்திர நாடானது; *1944* இல் குடியரசானது. *20* ஆம் நூற்றாண்டு வரை இங்கு முக்கிய தொழில் விவசாயம் மற்றும் மீன்பிடித்தல்தான். இங்கு வரி குறைவு. மருத்துவம் மற்றும் கல்வி இலவசம். இந்த நாட்டிற்கு தனி இராணுவம் கிடையாது. கோடை காலத்தில் சூரியன் மறைவதே இல்லை. குளிர் காலத்திலோ இருட்டு அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*சிந்தனைக் கதை*

# மூன்று பொம்மைகள்

காஷ்மீர் மன்னன் ஒரே மாதிரியான மூன்று பொம்மைகளை அக்பருக்கு அனுப்பி வைத்தான். கூடவே மூன்றுக்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும் என்கிற துண்டுச் சீட்டு ஒன்றையும் இணைத்திருந்தான். அரச சபையிலிருந்த அத்தனை பேரும் அந்த மூன்று பொம்மைகளையும் பார்த்தனர். ஒரு வித்தியாசம் கூட இல்லாமல் மூன்றும் ஒன்றாக இருப்பதாகவே தோன்றியது. அந்த மூன்று பொம்மைகளையும் அந்தக் குறிப்பையும் பீர்பாலிடம் கொடுத்தார் அக்பர். பீர்பாலும் மூன்று பொம்மைகளையும் நன்றாகப் பார்த்தார். பிறகு ஒரு குச்சி எடுத்து வரச் செய்தார். பொம்மைகளின் காதில் விட்டுக் காட்டினார்.

ஒரு பொம்மைக்கு குச்சி மறுகாது வழியாக வந்தது. மற்றொன்றுக்கு வாய் வழியாக வந்தது. மூன்றாவதுக்கு குச்சி வெளிப்படவேயில்லை.

அரசே, காதில் கேட்பதையெல்லாம் பிறரிடம் சொல்லிவிடும் பொம்மை வம்புக்கார பொம்மை. இது மிகவும் மட்டமானது. ஒரு காது வழியாக உள்ளே போகும் விஷயத்தை மறுகாது வழியாக வெளியிடும் பொம்மை அலட்சியமும் அசிரத்தையும் கொண்ட பொறுப்பற்ற பொம்மை. காதில் வாங்கும் விஷயத்தை வம்பளக்காமல் மனதில் தங்க வைத்து அசை போட்டு அதிலிருந்து அனுபவத்தைப் பெறும் பொம்மை முதல் தரம் என்றார் பீர்பால். எல்லோரும் பொம்மையைப் பார்த்தார்கள். ஆனால், அவர்களால் கண்டுபிடிக்க முடியாத விஷயத்தை பீர்பால் கண்டுபிடித்தார். மேலோட்டமாகப் பார்க்கும் யாருக்கும் எந்த விஷயமும் தெரிவதில்லை. நுணுக்கமான அறிவுடையவர்களால்தான் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.



**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. 30
2. நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்
3. 46 வருடங்கள்
4. துல்கர்னைன் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள்
5. 588
6. பைத்துல் ஹிக்மா
7. உமய்யா பின் கலப்
8. ஸலாத்துல் இஸ்திஹாறா
9. ஸையிது பின் தாபித் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள்
10. அல்கனீமத்
11. 81 தினங்கள்
12. வேதத்தை உடையவர்கள்
13. ஹஸரத் தல்ஹா (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள்
14. பௌதிக வளங்களை மேம்படுத்தல்
15. ஹஸரத் ஸல்மான் பாரிஸ் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள்
16. ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு

**பொது அறிவு**

1. மாவோ கிளர்ச்சிவாத இயக்கம்
2. 1802 இல்
3. லூக்கா பெஸியோலி
4. முதலியார் ஏ. சின்னலெப்பை
5. 1961

## எண்ணங்களின் வண்ணங்கள் - 12

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.


**தலைப்பு: சிரமதானம்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஜுலை 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 10

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்


## அச்சுப் பொறிகள் (Printers)

பாடம் 05

மனிதனின் நிறுவனம்சார் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் கணினிகள் பாரிய பங்களிப்புச் செய்கின்றன. கணினி பல்வேறுபட்ட துணைச் சாதனங்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும். அத்தொகுதியில் அடங்கியுள்ள அச்சுப் பொறி பெரும்பாலான கணினிப் பணிகளின் இறுதி முடிவாக அமைகின்றது. நாளாந்தம் கல்வி, சுகாதார, போக்குவரத்து, மற்றும் வங்கித் துறைகளில் கணினி பயன்படுத்தப்படுகின்றது. இந் நிறுவனங்களின் இறுதி கணினிச் செயற்பாடுகளாக அச்சுப் பிரதிகளை எடுத்தலை கண்டு கொள்ள முடியும்.


எனவே, கணினி வெளியீட்டு சாதனங்களில் என்றும் மிகப் பிரதானமான இடத்தை அச்சுப் பொறிகள் வகிக்கின்றன. அச்சுப் பொறிகளை அழுத்தும் அச்சுப் பொறிகள் (Impact Printers) என்றும் அழுத்தாத அச்சுப் பொறிகள் (Non Impact Printers) என்றும் இரண்டாக வேறுபடுத்தி நோக்க முடியும். அழுத்தும் அச்சுப் பொறி என்பது அச்சுப் பதிக்கும்போது அழுத்தத்தைப் பயன்படுத்துகின்றது. அழுத்தாத அச்சுப்பொறி என்பது அதற்கு மாறாக எதுவித அழுத்தமும் இன்றி அச்சுப் பதிப்பதாகும். இவற்றுக்கான உதாரணங்களை நோக்குவோம்:

1. அழுத்தும் அச்சுப் பொறிகள் ***(Impact Printers)***



அச்சீட்டுத் தொழிநுட்பவியலில் அழுத்தச்சுப் பொறிகள் மிக முக்கியமானவையாகும். தாளின் தலை (Head) தாளின் மீது உராய்வதனூடாக அச்சு நடைபெறுகின்றது. இவ்வழுத்தம் காரணமாக அச்சுப் பிரதி எடுக்கும்போது அதிக சத்தம் ஏற்பட்டாலும் அதில் பயன்படுத்தப்படும் நாடா (Ink Ribbon) குறைந்த விலையில் சந்தையில் கிடைப்பதனால் அதிக பிரதிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைகின்றது. அதே சமயம், இவ்வச்சுப் பொறிகளில் தொழிற்பாடுகள் வரையறைக்கு உட்பட்டு காணப்படுகின்றமையினால் கூடிய காலம் பிரச்சினைகள் இன்றி பயன்படுத்தவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

புள்ளி அமைவுரு அச்சுப் பொறி
***(Dot Matrix Printers)***





வரி அச்சுப் பொறி
***(Line Printers)***

2. அழுத்தாத அச்சுப் பொறி ***(Non Impact Printers)***

இவ்வச்சுப் பொறி பயன்படுத்தப்படும் தாளின் மீது அழுத்துவதில்லை. எனவே, இவற்றில் இரைச்சல் ஏற்படுவதில்லை. அதேவேளை, கிடைக்கும் அச்சுப் பிரதிகள் மிகத் தெளிவானவையாகவும் திருத்தமானவையாகவும் காணப்படும். எனினும், இதற்காகப் பயன்படுத்தப்படும் திரவ மை, உலர் மைப்பொடி (Ink, Toner) என்பன விலை உயர்ந்ததாகையால் இதனைப் பயன்படுத்தல் இலாபகரமானதன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லேசர் அச்சுப் பொறி *(Laser Printers)***




லேசர் அச்சுப் பொறியில் அச்சிடப்பட வேண்டிய பகுதி ஒரு லேசர் கற்றையின் மூலம் ஓர் ஏற்றிய உருளை (Drum) மீது அனுப்பப்படுவதும் அதன் மீது ஒரு பொறியுறையில் (Cartridge) உள்ள உலர் மைப்பொடி (Toner) படுவதனூடாக அச்சிடப்படும். இவை மிக வேகமாக அச்சிடக் கூடியதும், கறுப்பு மற்றுமுள்ள நிறங்களில் உலர் மைப்பொடிகளைக் (Toner) கொண்டு தரமான உருக்களை பதிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றன.

**குமிழி / மை தாரை அச்சுப் பொறி *(Bubble / Ink Jet Printers)***



இந்த அச்சுப் பொறியில் பொதியுறையில் (Cartridge) திரவ நிலையில் மை காணப்படும். இவை சிறிய துவாரங்களினூடாக தாளின் மீது பட்டு அச்சிடப்படும். தற்போது வெளியிலிருந்து திரவ மையினை உட்செலுத்துவதற்கான வசதிகள் கொண்ட அச்சுப் பொறிகளையும் சந்தையில் கொள்வனவு செய்து கொள்ள முடியும். இவ் அச்சுப் பொறிகளின் விலைக்குச் சமமான விலையிலேயே பெரும்பாலும் பொதியுறைகள் (Cartridge) விற்பனைக்கு கிடைப்பதாலும், குறைந்த பாவனைக் காலத்தைக் கொண்டிருப்பதனாலும் இவ்வச்சு இயந்திரங்களின் பயன்பாடு குறைவானது. எனினும், லேசர் அச்சு இயந்திரத்துடன் ஒப்பிடும்போது இதன் குறைந்த விலையும், சிறு பணிகளுக்குப் பயன்படுத்த முடியும் என்பதனாலும் நிற மைகளைக் கொண்டிருப்பதனாலும் பயனர்கள் இவ்வச்சு இயந்திரங்களை விரும்பி கொள்வனவு செய்கின்றனர்.

**வெப்ப அச்சுப் பொறி (Plotter)**



இந்த அச்சுப் பொறி வெப்பத்தைப் பயன்படுத்தித் தாளின் மீது அச்சிடும். வர்த்தக வியாபாரம், தன்னியக்க காசளிப்புப் பொறி ஆகியவற்றில் பற்றுச் சீட்டுக்களை வழங்குவதற்கும் சுட்டுத் துண்டுகளை அச்சிடுவதற்கும் இவ் அச்சு இயந்திரங்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

இம்மூன்று அச்சுப் பொறிகளையும் ஒரே பார்வையில் ஒப்புநோக்குவோம்பு

| | Dot Matrix | Inkjet | Laser |
|---|---|---|---|
| ஆரம்ப செலவு | குறைவு | குறைவு | அதிகம் |
| ஒவ்வொரு பக்கம் அச்சிட | குறைவு | அதிகம் | மத்திமம் |
| வேகம் | குறைவு | மத்திமம் | அதிகம் |
| சத்தம் | அதிகம் | குறைவு | குறைவு |
| அச்சின் தரம் | குறைவு | மத்திமம் | அதிகம் |
| படங்கள் அச்சிடல் | முடியாது | முடியும் | முடியும் |
| வர்ண அச்சிடல் | முடியாது | முடியும் | சிலதில் |
| அச்சு ஊடகம் | ரிப்பன் | திரவ மை | உலர் மைப்பொடி |

பிரபல்யமான அச்சுப் பொறிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் கீழ்வருமாறு:

- Apple
- Cannon
- Epson
- Forgo
- Fujitsu
- Hewlett-Packard
- IBM
- Konica
- Lenovo
- Lexmark
- Nipson
- Panasonic
- Ricoh
- Samsung
- Sharp



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புது நம்பிக்கை துளிர் விடுகையில்...

ஜே.எம். அஸீம் ( நளீமி )

இழப்புக்கள் வாழ்வோடு ஒன்றிணைந்த விடயமாகும். பலர் இழப்பு என்பது வாழ்வில் நிகழக் கூடாத ஓர் அம்சமாகவும் அதிலிருந்து மீள்வது சிரமமான அல்லது இயலாத ஒன்றென்ற எண்ணத்திலும் நம்பிக்கைக்கு பூட்டிட்டு விடுகின்றனர். இருப்பதை இழந்தால்தானே இருந்ததை விட சிறந்ததைப் பெற முடியும்.

இழப்புக்கள் பல வகைப்படும். வெற்றியை இழப்பது, தக்க வைத்துக் கொண்டிருக்கும் முதலிடத்தை இழப்பது, சேர்த்து வைத்த சொத்து செல்வங்களை இழப்பது, நம்பிக்கையை இழப்பது, நேரத்தை இழப்பது, உடல் ஆரோக்கியத்தை இழப்பது... இப்படி பல இழப்புக்கள் உள்ளன. நீங்களும் எதையாவது இழந்திருக்கலாம். இழப்பது என்பதை விட இழந்ததை மீட்பது எப்படி என்ற பாடம்தான் வாழ்வில் உங்களை உயர்த்தும்; மீண்டும் நிலைநிறுத்தும்.

## இழந்ததை மீட்டெடுப்பது எப்படி?

முகம்மது அலியின் மரணம்தான் கடந்த மாதம் சூடான தலைப்பு. அமெரிக்க அரசால் சிறை விதிக்கப்பட்டு சில காலம் சிறையில் இருந்த முகமது அலி பின்னர் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொண்டார். அவரது ஆட்டத்தைக் காண பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்தனர். ஆனால், அவரோ அதில் தோல்வியடைந்தார். அத்துடன், அவரது குத்துச்சண்டை ஆட்டம் முடிந்துவிட்டது என அனைவரும் கணக்குப் போட்டு விட்டனர். இழந்ததை மீட்டெடுக்கத் தெரிந்தவர்களுக்கு இதெல்லாம் அவர்களின் ஆட்டத்தை முடித்துவிடும் முற்றுப் புள்ளிகளல்ல. அதன் பின்னர் கடுமையான பயிற்சிகளுடன் தனது முன்னேற்றப் பாதையை மீளவும் வடிவமைத்துக் கொண்டார் முகமது அலி.

முகமது அலி மட்டுமல்ல, இழந்ததை மீட்டெடுக்கும் அற்புதக் கலையை அறிந்தவர்கள் பலர். அவர்களால்தான் இழந்த இளமையை மீளப் பெற முடியும். இழந்த வெற்றியிலிருந்து மீள முடியும். இழந்த செல்வங்களை திரும்பி அழைக்க முடியும். இழந்த ஆரோக்கியத்தை மீளப் பெற முடியும். இழந்துவிட்டோம் என்பது அவர்களுக்கு முற்றுப் புள்ளியல்ல.

வாழ்வில் இழப்பு என்பது நிரந்தரமானதல்ல. வாழ்வை மீண்டும் மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கத் தெரிந்தவர்களுக்கு எத்துணை இழப்பும் இழப்பல்ல. எதை இழந்தாலும் வாழ்வில் என்னால் முடியும் என்ற நம்பிக்கையை மட்டும் இழக்காதீர்கள். இந்த நம்பிக்கை புதிதாக ஒரு விடயத்தை ஆரம்பிக்கின்றபோது தேவைப்படுவதை விட அதிகமாகவே இழந்தவற்றை மீட்டெடுக்கின்றபோது தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வில் இழப்பு என்பது நிரந்தரமானதல்ல. வாழ்வை மீண்டும் மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கத் தெரிந்தவர்களுக்கு எத்துணை இழப்பும் இழப்பல்ல. எதை இழந்தாலும் வாழ்வில் என்னால் முடியும் என்ற நம்பிக்கையை மட்டும் இழக்காதீர்கள்.**

கொஞ்சம் கொஞ்சமாக தனது செவிப்புலனை இழந்து கொண்டிருந்த ஜேர்மனிய இசை மேதை பீத்தோவன் 46 வயதில் கேள்திறனை முழுமையாக இழந்த பின்னர் உருவாக்கிய இசைக் கோவை உலகப் புகழ் பெற்றது. ''என்னது கேள்திறனே இன்றி 46 வயதில் இசைக் கோவையை உருவாக்கி உலகப் புகழ் பெறுவதா?'' என்ற நம்பிக்கையீன வரிகளினதும் வார்த்தைகளினதும் சொந்தக்காரனாக இருந்திருந்தால் பீத்தோவனை இன்று யாருக்கும் தெரிந்திருக்காது. செவிப்புலனின்றியே இசையமைத்து உலகப் புகழ் பெற முடியும் என்றால் அதை இழந்தால் இதைச் செய்ய முடியாது என்ற மனோநிலை மாற வேண்டும்.

உங்களுக்குள் மறைந்திருக்கும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் எந்தவோர் இழப்பும் இல்லாமல் செய்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

போராட்டங்களோடும் கவலைகளோடும் இழப்புக்களோடும் பிரச்சனைகளோடும் வாழ்வதை நாம் வெறுக்கிறோம். வாழ்க்கை சுமுகமாக, அமைதியாக இருக்க வேண்டும் என நினைக்கிறோம்.

**ஒரு கதை...**

நாரமன் வின்சன் புகழ் பெற்ற எழுத்தாளர். ஒருமுறை அவரது நண்பரை தெருவில் சந்தித்தார். இனி அவரது வார்த்தைகளிலேயே கேட்போம்...

எனது நண்பன் ஜோர்ஜ் என் எதிரே வீதியில் வருவதைக் கண்டேன். ஏதோ கவலையால் வாடி வதங்கியிருப்பது அவனது முகத்தைக் கண்டதும் புரிந்து கொள்ள முடியுமாக இருந்தது. அவனைக் கண்டதும் நலம் விசாரிக்க, அவனோ அவனது பிரச்சினைகளைப் புலம்ப ஆரம்பித்தான். தனக்கு தீர்வு சொன்னால் 5000 டொலர்களை எனது அறக்கட்டளை நிலையத்திற்கு அன்பளிப்பு செய்யத் தயார் எனவும் சொல்லி விட்டான்.

நானும் ஆழமாக யோசித்தேன். மீண்டும் யோசித்தேன். கடைசியில் விடை கண்டுபிடித்தேன். உடனே ஜோர்ஜ்ஜிடம் கூறினேன்.

''நேற்று நான் ஆயிரக்கணக்கானோர் இருக்கிற ஓர் இடத்துக்குப் போனேன். அங்கே யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. அங்கு போக நீ விருப்புகிறாயா?''

''நாம் அங்கு போகலாம். அங்கு போக நான் ஆவலாக இருக்கிறேன்'' என்று சொன்னான் அவன்.

''அப்படியா, சரி நாளைக்கு நான் உன்னை உட்லான் கல்லறைத் தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போறேன். எனக்கு தெரிந்த வரையில் அங்கு மட்டும்தான் பிரச்சனையே இல்லாத மனிதர்கள் இருக்கிறார்கள்.''

இதுதான் வாழ்வின் யதார்த்தம். நோர்மன் அடிக்கடி சொல்வார், ''உனக்குப் பிரச்சினையே இல்லாவிட்டால் நீ மோசமான ஆபத்தில் இருக்கிறாய்'' என்று அர்த்தம்.

வாழ்வு பிரச்சினைகளோடும் இழப்புக்களோடும் சம்பந்தப்பட்டதுதான் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். அதிலிருந்து மீள்வது எப்படி என்பதைக் கவனியுங்கள். இனி இழப்புக்கள் ஒவ்வொன்றும் புதிய நம்பிக்கையுடன் துளிர்விட வேண்டும்.

லூயிஸ் எல் அமோர், இரண்டு கோடி பிரதிகளுக்கு மேல் நூல் அச்சிட்ட பெருமைக்குரியவர். நூற்றுக்கு மேற்பட்ட நாவல்களை எழுதியவர். அவர் தனது முதல் படைப்பு பிரசுரிக்கப்படுவதற்கு முன் 350 தடவைகள் நிராகரிக்கப்பட்டார். பிற்காலத்தில் அமெரிக்க சிறப்பு தங்கப் பதக்கம் பெற்ற முதல் எழுத்தாளர் ஆனார். இந்த இழப்புக்கள் எல்லாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த ஒரே பாடம் இன்னுமொரு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அகரம் ஸ்போர்ட்ஸ்



விரைவு - உயர்வு - துணிவு

## ஒலிம்பிக்கும் டெனிஸ்ஸும்



ஒலிம்பிக்கிற்கும் டெனிஸ்ஸுக்கும் இடையிலான தொடர்பு சுவாரஷ்யமானது. இடைநடுவில் வருவதும் பின்னர் திடீரென காணாமல் போவதுமாக டெனிஸ் ஒரு பொறுப்பற்ற விருந்தாளியாக ஒலிம்பிக்கில் விளங்கியது.


ஆரம்பத்தில் ஒலிம்பிக்கில் காணப்பட்ட டெனிஸ் பின்னர் இடைநடுவே காணாமல் போய்விட்டது. 1968 மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் அது வெறும் காட்சி விளையாட்டாக மாத்திரமே இடம்பெற்றது. ஆனால், 1984 லா ஏன்ஜெல் ஒலிம்பிக்கில் கம்பீரமாக டெனிஸ் விளையாட்டு இடம்பெற்றது. ஆனாலும், ஏனைய விளையாட்டுக்களைப் போல டெனிஸ் ஒலிம்பிக்கில் இடம் பெறத் துவங்கியது 1988 ஆம் ஆண்டுதான்.

## ஒரு விளையாட்டு



பனிச்சறுக்கு அல்லது மலைச்சரிவு பனிச்சறுக்கு **(Alpine skiing)** பனித்தூவி படர்ந்த மலைகளில் பிணைக்கப்படாத காலணிக் கட்டுக்களுடன் சறுக்குக் கட்டைகளில் சறுக்கிச் செல்லும் உடல் திறன் விளையாட்டு ஆகும். இது பனித்தூவி, மலைச்சரிவுகள் மற்றும் சுற்றுலா கட்டமைப்பு உள்ள இடங்களில், குறிப்பாக ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் அமெரிக்காவின் அந்தீசு மலைத்தொடர் மற்றும் கிழக்காசியாவில் பெரிதும் விளையாடப்படுகிறது. குளிர்கால ஒலிம்பிக்கில் இது ஒரு விளையாட்டாகும்.

## மைதான விபரீதங்கள்



1929 இல் கெமரூன் என்பவர் பந்து தாக்கி பல நாட்கள் கோமாவில் இருந்துள்ளார். 1961 நாரி காண்ட்ராக்பர் என்பரின் மண்டை ஓட்டை தகர்த்துவிட்டது சார்லி வீசிய பந்து. அதன் பின் காண்ட்ராக்டர் சர்வதேச விளையாட்டுக்களில் கலந்து கொள்ளவேயில்லை.

இதேபோல, 17 வயதான அப்துல் அஸீஸ் என்ற பாகிஸ்தான் வீரரும் 1942 ஆண்ட்ரூ ருக்கார் என்பவரும் கிரிக்கட் மைதானத்திலேயே உயிர் இழந்துள்ளனர்.

## மாணவி செனப் சவுமி தேசிய சம்பியனாக தெரிவு



இலங்கை செஸ் சம்மேளனம் 2016 ஆம் ஆண்டுக்காக ஒழுங்கு செய்திருந்த செஸ் போட்டியில் கண்டி உயர் பெண்கள் கல்லூரி மாணவி செய்னப் சவுமி தேசிய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டார். கொழும்பு சர்வதேச ஹொக்கி விளையாட்டு கேட்போர்கூடத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற இப்போட்டியில் நாடளாவிய ரீதியில் திறமைவாய்ந்த செஸ் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்குபற்றினர். இரண்டு முறை சம்பியனான தசுனி மென்டிசை மூன்றாம் முறை சம்பியனாக முடியாதவாறு தடுத்து செய்னப் சவுமி சம்பியனாக கிரீடம் சூடிக் கொண்டார். கல்லூரி மட்டப் போட்டிகளில் பல பதக்கங்களை வென்றுள்ள 16 வயதுடைய செய்னப் இவ்வாண்டு மொங்கோலியா, உலான்பாத்தாரில் நடைபெற்ற ஆசிய இளைஞர் செஸ் சம்பியன்ஷிப் போட்டியிலும் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் அக்குறணை ஹம்பத்தனையைச் சேர்ந்த முஹம்மத் சவுமி - ஷாமிலா தம்பதியரின் புதல்வியாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஏ அணியில் அக்குறணை அஸ்ஹர் கல்லூரியின் முஹம்மத் டில்ஷாட் தெரிவு



இங்கிலாந்துக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொள்ளும் இலங்கை ஏ அணியில் அக்குறணை அஸ் ஹர் கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் இடது கை வேகப்பந்து வீச்சாளருமான முஹம்மத் டில்ஷாட் இணைக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்துக்கான கிரிக் கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை ஏ அணி விபரம் இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக் கப்பட்டுள்ளது. இலங்கை ஏ அணியின் தலைவராக அஷான் பிரியஞ்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இடது கை வேகப்பந்து வீச்சாளரான மொஹமெத் டில்ஷாட், மணிக்கு சுமார் 130 கிலோ மீற்றருக்கும் அதிகமான வேகத்தில் மிகத்துல்லியமாக பந்து வீசக்கூடிய ஆற்றல் படைத்தவர். 14 முதல்தரப் போட்டிகளில் விளையாடி யுள்ள டில்ஷாட், 42 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## விசாலமான ஆடுகளம்



மற்ற விளையாட்டுக்கள் சில சதுர அடிகளுக்குள் அமைந்த விளையாட்டுத் திடலில் நடைபெறும்போது மிக விசாலமான திடலில் நடக்கும் விளையாட்டு என்ற பெருமை கோல்ப் விளையாட்டிற்கு உண்டு. சுமார் 200 ஏக்கர் வரை பரந்து விரிந்தது கோல்ப் மைதானம்.

மற்ற மைதானங்கள் சீராக அமைந்திருந்தாலும் கோல்ப் மைதானத்தில் மாத்திரம் மேடு பள்ளங்கள், மரம் செடிகொடிகள், நீர்நிலைகள் என்ற விசித்திர அமைப்பைக் காணலாம்.

## எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இலங்கையர்



எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த முதலா வது இலங்கையர் என்ற சாதனையை மலையேறும் வீராங்கனையான ஜயந்தி குரு உடும்பல, ஜொஹான் பீரிஸ் ஆகியோர் பதிவு செய்துள்ளனர். இலங்கை வர லாற்றில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண் என்ற பெருமையைப் பெற்ற ஜயந்தி மற்றும் பீரிஸ் ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் பயணத்தை ஆரம்பித் தனர். நான்கு கட்டங்களாக அதாவது, 4 முகாம்களில் தங்கி பயிற்சிகளை மேற்கொண்டு மலை உச்சியை அடைந்துள்ளனர்.

## ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் முதன் முறையாக பங்கேற்கும் அகதிகள் அணி

ஆகஸ்ட் 5 ஆம் திகதி பிரேசிலில் 31 ஆவது கோடை கால ஒலிம்பிக் போட்டி தொடங்குகிறது. ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் அகதிகள் அணி பங்கேற்க இருப் பது இதுவே முதல் முறையாகும். அணியில் 6 வீரர்கள், 4 வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர். அணியின் அதிகாரிகளாக 12 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒலிம் பிக் கொடியின் கீழ் இவர்கள் பங்கேற்பார்கள். தெற்கு சூடான், சிரியா, காங்கோ, எத்தியோப்பியா ஆகிய நாடு களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் அணியில் இடம் பெற்றுள்ளனர். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலை வர் தாமஸ் பேக் பேசுகையில், 206 நாடுகளைப் பிர திநிதித்துவப்படுத்தும் வீரர்களுக்கு இணையாக, அகதி வீரர்கள் அடங்கிய அணியும் ஒலிம்பிக் போட்டிகளின் போது ஒரே மாதிரியாக நடத்தப்படும் என உறுதியளித் துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வல்லோன் வாக்கு

மாண்புமிகு ரமழானில்
மன அமைதி கிட்ட
இறங்கியது இறை வேதம்
முழு சமூகமும்
நல் வழி ஒழுக



முன்னுரை முகவுரை
என்னுரை முடிவுரை
எதுவுமற்ற தெளிவுரை
ஏகத்துவத்தை எடுத்துரைக்கும்
ஏகன் அவன் - அறிவுரை

மறைவானவற்றை
மனது ஏற்க சான்று பகரும்
மறை - இது
மனோ இச்சையில் மூழ்கி
மதி பெற்ற பயன் இழக்கும்
மானிடர்க்கு சிறை - இது

பாமரன் முதல் பண்டிதன் வரை
படிக்கும் போதே பாடம் புகட்டும்
எளிதினிலே புரிந்துணர்த்தும்
புனிதமான புர்கானிது!

மரணம் தாண்டிய
மறுமை வாழ்வில்
மணங்கமழும் மலர்கள் சூழ்ந்த
சுவனம் அடைய
திருக்குர்ஆனும் தீர்க்கதரிசனமும்
தீர்ந்துவிடா திருவமுதங்களே!

எஸ். சிபானி முஹம்மட்
ஒலுவில்

# தாயே!

தாயே
என் உயிரை மதித்து
உன் உயிரை துச்சமாய் நினைத்து
என்னை உலகுக்கு அறிமுகம் செய்தாய்



உன்னைப் போன்று பாசமுள்ளவர்கள்
இவ்வுலகில் யாரும் இருக்க இயலாது
கருவறையில் சுமந்து என்னை கடுகளவு கூட
துன்பமின்றி பெற்றெடுத்தாய்!

இன்பத்திலும் துன்பத்திலும் கலந்திருந்தாய்
அல்லாஹ்வின் திருநாமத்தையும்
அல்குர்ஆனிய வேத வரியையும்
அளவில்லாமல் கற்றுத் தந்தாய்

உன்னைப் போன்று இவ்வுலகில்
பாசமுள்ளவர் எவர் தாயே?!

உலகம் அறியா வயதில், ஓரிடம்கூட
தெரியாமல் இருந்தேன் நான்
எல்லாவற்றையும் அறிய வைத்தவளும் நீதானே!
உன்னை எப்படி போற்றுவேன்
ஒரு உலகம் போதாது தாயே...!

உறவென்பது உயிர் இருக்கும் வரை
தாயென்பவள் உலகம் அழியும் வரை!

தாயே!
நாளை ஜன்னாவில் இருகரம் கோர்த்து
வீறு நடை போடுவோம்
இன்ஷா அல்லாஹ்!

பஹ்மா ராபிக்
இஸ்லாஹிய்யா வளாகம்
புத்தளம்

# அவர் ஆசிரியர்

எம்மை எமக்கே அறிமுகம் செய்யும்
ஆளுமை அவர்
அன்பும் அறிவும் கலந்து
எம்மை செதுக்கும்
உன்னத சிற்பி அவர்



ஓரவஞ்சனையற்ற ஒளிவிளக்காய்
உத்தம உறவாய்...
எமது பாதைகளை சீர்படுத்தும்
செம்மல் அவர்...
நிலவை நாம் எட்டித்தொட
தோள்தரும் தியாகி அவர்

எப். ரஹீமா பானு
ஹாதியா வளாகம்

## பேசும் கவிதை - இல 15



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஜூலை 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### அநீதி

அநீதிகளும் அட்டூழியங்களும்
அனாச்சாரங்களும் அராஜகங்களும்
பாரினில் அரங்கேறிட
வானமே பொங்கியெழுந்து
கண்ணீராய்
பொழிந்ததுவோ?

✍ **அஸ்மா மஸாஹிம்**
**அல் பஹ்ரியா ம.க.**
**தொட்டவத்தை**

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### தனியாய்

பொருட்களை இழந்து
வீட்டை இழந்து
படித்துப் பெற்ற பட்டங்களைத்
துறந்து
உறவுகளைத் தொலைத்து
இப்போது தனியாய்
தவிக்கிறேன்

✍ **சுக்ரா ஸுஹைட்**
**கம்பளை**

### வெள்ளமே

எம் குடியிருப்புக்களை
இழந்து
அசுத்த நீரில் மிதந்து
அகதியாய் அவதியாய் கிடந்து
நாம் பாடங்கள் படித்தோம்
நிறையவே

✍ **எம்.எஸ்.எம். பயாஸ்**
**கு/பறகஹதெனிய ம.க.**
**குருணாகல்**

### வெள்ளம் தரும் பாடம்

இயற்கையை எதிர்த்து
செயற்கையில் வீறுநடை
சென்றாய்
ஈற்றில் வெள்ளத்தில் நீ
அடித்துச் செல்லப்பட்டாய்

✍ **எம்.எல். மிஸ்பாக்**
**மூதூர்-06**

### ஏக்கம்

உறைவிடங்கள் இழந்து
உறவுகள் துறந்து
உடமைகள் அழிந்து
எங்களை அதிரவைத்த
வெள்ள அலையே!

✍ **எம்.கே.எப். ஸாஹிரா**
**மா/மின்ஹாஜ் மு.ம.வி.**
**நிககொள்ள**

### ரஹ்மானே!

இணையில்லா ரஹ்மானே
நடந்திட பாதையில்லாமல்
சோதித்தாய்
உணவின்றி பட்டினியில்
எம்மை துயர் படவைத்தாய்
ஈற்றில் நாம்
உணர்ந்து கொண்டோம்
உன் வல்லமையை

✍ **எம்.என். தீமா**
**கொச்சிக்கடை**

### கவலைப்படாதீர்

கவலைப்படாதீர்
சோதரா
இழந்ததை
இறைவன் மீண்டும்
தருவான்
அவனுக்கே
எல்லாப் புகழும்
சொல்லி விடு
உன் வணக்கத்தில்

✍ **பஸ்னா இம்தியாஸ்**
**மாவனல்லை**

### வேதனை

சில்லென்று வீசிய காற்றில்
சிதறி விழுந்த
மழைத் துளிகள்
வெள்ளமாய்
சோதனைகள் வேதனைகள்
வந்து சேர்ந்ததுவே

✍ **அஸ்மா இக்ராம்**
**பெலந்தை மு.வி.**
**அகலவத்தை**

### சீற்றம்

இயற்கையின் சீற்றங்களால்
பாவக்கறைகளை நீக்கி
எம் பாவி நெஞ்சங்களை மாற்றி
கரை தாண்டிச் சென்ற வெள்ளம்
எம் கண்ணீரையும்
அள்ளிச் சென்றதுவோ?

✍ **எம்.ஏ. ஸகீகா**
**தம்பாலை**
**பொலன்னறுவை**

### ஏய் மழையே!

இயற்கையே...
உன் மடியே தாயென்று
நம்பியவராய் நாமிருக்க
அடிக்கடி மரணப்பாய் விரிக்கிறாய்
வெள்ள வீதியில் விளையாடிய
காகித கப்பல்களும் இன்றில்லை
எம்மைக் காப்பாற்றிட
மழையே!
இனியும் வேண்டாமே
போதுமாக்கிடு உந்தன்
பலப் பரீட்சைகளை...!

✍ **யாஸீன் பாவா ஹுஸைன்**
**பொத்துவில்**

### பெரு வெள்ளம்

பொழிந்த சில மழைத்துளிகள்
பெரு வெள்ளமாய் பொங்கியது
ஆறுகள் பெருக்கெடுக்க
மலைகள் சரிந்து விழ
உயிர்கள் உடமைகள்
ஊனமாய் போயின..
யா அல்லாஹ்!
மீண்டும்
எமக்கு மீட்டித் தா ரஹ்மானே

✍ **எம்.என். ஹஸன்**
**காலி**

### இயற்கையை நேசி

இயற்கையை
நேசியுங்கள்
இழிசெயல்
தவிர்த்திடுங்கள்
இன்னல்கள் இன்றி
இறையருளுடன் வாழலாம்

✍ **எம்.எம்.எப். இல்மா**
**மடவளை பஸார்**

### தரமிருந்தும் இடம்பிடிக்கத் தவறியவை

இபாமா இஸ்மாயீல், பெலந்தை மு.வி.
அமீரா ஷாறா, எனசல்கொல்ல ம.க.
எம்.எல். றிப்கா, மூதூர் - 06
எம்.எஸ். அஜ்மல், பறகஹதெனிய
பீ.எப். சிப்கா, மூதூர் - 05
எம்.ஏ.என்.எப். பஹ்ஜத், புத்தளம்
ஸஹ்றா ஸாஹிர், திஹாரிய
ஆர்.லிகா, நம்முவாவ மு.மா.வி. நிகவெரடிய
ஏம.ஏ.எப். ஆஜிலா, மாவனல்லை
முஹம்மத் அக்ரம், வேப்பமடு, புத்தளம்
றீஹா பாத்திமா, ஸாஹிரா கல்லூரி, குருணாகல்
முஹம்மத் முன்சிர், ஹுமைஸரா ம.க. பேருவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 10

## குருணாகலை அரசியல் காலப் பிரிவில் முஸ்லிம்கள்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

தம்பதெனிய, யாப்பஹுவ அரச மரபின் தொடர்ச்சியாகவே குருணாகலை அமைந்தது. 1284 இல் யாப்பஹுவ மன்னனான முதலாம் புவனேகபாகு மரணமடைந்தான். இவனது மரணத்துக்குப் பின் இலங்கை அரசியலில் ஓர் இடைவெளி இருப்பதை சூலவம்சம், தலதா சிரித ஆகிய நூல்களைப் படிக்கும்போது உணர முடிகின்றது.

கி.பி. 1284 இல் பாண்டிய மன்னன் ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் ஆரியச் சக்கரவர்த்தி எனும் தளபதியின் தலைமையில் ஒரு படையை அனுப்பினான். இப்படை யாப்பஹுவவைத் தாக்கி புனித சின்னங்களையும் வேறு பல பெறுமதியான பொருட்களையும் இந்தியாவுக்கு கொண்டு சென்றது. இதன் பின் அரசனான 4 ஆம் விஜயபாகுவின் மகனான 3 ஆம் பராக்கிரமபாகு இந்தியாவுக்குச் சென்று பாண்டிய மன்னனிடம் பரிந்து பேசி அப்பொருட்களைப் பெற்று வந்து பொலன்னறுவையில் இருந்து ஆட்சி செய்தான். இது கி.பி. 1287 இல் நடைபெற்றிருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இம்மன்னன் காலத்தில் பாண்டியர் ஆதிக்கம் இலங்கையில் வலுப் பெற்றிருந்தது. இதனை விரும்பாத பிரதானிகள் குருணாகலையில் இருந்த இளவரசனான புவனேகபாகுவைச் சார்ந்து நின்றனர். இவர்களின் உதவியோடு 3 ஆம் பராக்கிரமபாகுவை வெற்றி கொண்டு, கி.பி. 1293 இல் 2 ஆம் புவனேகபாகு என்ற சிம்மாசனப் பெயரோடு புவனேகபாகு குருணாகலையில் அரசபீடமேறினான்.

கி.பி. 1293 இல் 2 ஆம் புவனேகபாகு ஆரம்பித்து வைத்த இம்மரபு 1326 இல் 4 ஆம் பராக்கிரமபாகுவின் மரணத்தோடு முடிவுற்றது. இம்மன்னனோடு தம்பதெனிய அரச மரபும் முடிவுற்றது. இவ்வகையில் கி.பி. 1293-1340 வரையான காலப் பிரிவே இலங்கையின் அரசியல் வரலாற்றில் குருணாகலைக் காலம் என அழைக்கப்படுகின்றது.

மிகக் குறுகிய ஒரு காலத்துக்கு இது உரித்துடையதாக இருந்தாலும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த காலப் பிரிவாக இது அமைந்தது. கி.பி. 1293 இல் மன்னனாக முடிசூடிய 2 ஆம் புவனேகபாகுவின் வாழ்வு முஸ்லிம் சமூகத்தோடு நெருக்கமாக பின்னிப் பிணைந்ததாக அமைந்திருந்தது. இம்மன்னன் குருணாகலை அஸ்வதும பிரதேசத்தைச் சேர்ந்த அதின விதின வீரவிக்ரமசிங்ஹ முதியான்சே என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட முஸ்லிம் பிரபுவின் மகளான மெதகெடிய குமாரி என்ற முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்தான். இவர்கள் இருவருக்கும் பிறந்த மகனே இலங்கையின் அரசியல் வரலாற்றில் 'வஸ்த் ஹிமி' எனக் குறிக்கப்படுகிறார்.

மேற்குறித்த முஸ்லிம் பெண்ணைத் திருமணம் செய்த மன்னன் யார் என்பதில் வரலாற்று அறிஞர்களுக்கிடையே அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன. 2 ஆம் பராக்கிரமபாகுவே இம்மன்னன் என எதகம்மத சுமனஜோதி ஹிமியும் 2 ஆம் விஜயபாகு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ரய்பியல் தென்னகோன் என்பவரும் 4 ஆம் விஜய பாகு என தென்னகோன் விமலரத்னவும் கொடஹேன பங்கய கீர்த்தி ஹிமியும் குறிப்பிடுகின்னர். வரலாற்று சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது இந்நிகழ் வோடு தொடர்புறும் மன்னன் 2 ஆம் புவனேகபாகு என வரலாற்று ஆய்வாளர் C.E. குரே குறிப்பிடுகிறார். 2 ஆம் புவனேகபாகுவின் மரணத்தின் பின் வஸ்த்ஹிமி புவனேகபாகு என்ற பெயருடன் இவர் அரச கட்டிலே றினார்.


வஸ்த்ஹிமி பற்றிய கருத்துக்கள் குருணாகலை முஸ்லிம்கள் வரலாற்றில் மட்டுமல்லாது இலங்கை யின் அரசியல் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்கதொரு திருப்பு முனையாகும். பல்வேறு அரசியல் நெருக்கடி களுக்கு முகங்கொடுக்க இவர் நிர்ப்பந்திக்கப்பட்ட மையால் இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இரு வேறுபட்ட நிலைப்பாடுகளைக் காட்டுகின்றன.


ஒன்று, இவர் ஒரு முஸ்லிமாக இருந்தமையால் 2 ஆம் புவனேகபாகுவிற்குப் பிறகு அரசராக முடிசூடி யமையை விரும்பாத பௌத்த பிரதானிகளால் திட்ட மிட்டு கொலை செய்யப்பட்டார்.

இரண்டு, 2 ஆம் புவனேகபாகுவின் இன்னொரு மகனான 4 ஆம் பராக்கிரமபாகு இவரது கண்களைப் பிடுங்கி கொலை செய்ய முயற்சித்தான்.

முதலாவது கருத்தை நிறுவக்கூடிய வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இல்லை. எனவே, இவர் கொலை செய்யப்பட்டார் என்பதை ஒரு மரபுவழிச் செய்தியா கவே கருத வேண்டியுள்ளது. இந்நிகழ்வு பற்றி எழு தும் வரலாற்றாசிரியர் ரெவண்ட் ஹார்ட் என்பவரும் அவ்வாறே கருதுகின்றார்.

இரண்டாவது கருத்தை நிறுவக்கூடிய சான்றுகள் இலங்கை வரலாற்றின் இறுதிக் கூறுகளை விளக்கும் சூலவம்சத்தில் இருந்ததாக C.E. குரே, எட்வட் பெரேரா ஆகிய வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பண் டித பராக்கிரமபாகு என பின்னர் அழைக்கப்பட்ட 2 ஆம் புவனேகபாகுவின் முதல் மனைவியின் மகன் வஸ்த்ஹிமியை ஒழித்துக் கட்டுவதற் காக கண்களைப் பிடுங்கிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண் டான் என்ற செய்தி சூலவம் சத்தின் மூல ஓலையில் எழுதப்பட்டிருந்தது. இலங்கையின் அரசியல் வர லாற்றில்





கீர்த்திமிக்க மன்னர்கள் வரிசையில் வைத்து நோக்கப் படுகின்ற பண்டித பராக்கிரமபாகுவின் பெருமைக்கு அவன் செய்த இச்செயல் பொருத்தமற்றதாக அமைந் ததால் மூல ஓலையில் இருந்த இச்செய்தி நீக்கப்பட் டது. 18 ஆம் நூற்றாண்டில் சூலவம்சத்தின் 38 - 100 வரையான அதிகாரங்களை பாளியில் இருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்த முதலியார் மிஜிசிங்ஹ 4 ஆம் பராக்கிரமபாகுவின் பெருமைக்கு களங்கம் தரும் இப்பகுதியை நீக்கி மொழிபெயர்த்துள்ளார் என வர லாற்றாய்வாளர்களான C.E. குரே, எட்வட் பெரேரா ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

இக்கருத்தை மேலும் வலுப்படுத்தும் தகவல் ஒன்றை ராஜஸ்தான் பல்கலைக்கழக வரலாற்றுத்து றைப் பேராசிரியர் கலாநிதி வசுந்தரா மொஹான் தரு கிறார். கண்கள் குருடாக்கப்பட்ட வஸ்த்ஹிமியே இலங் கையின் வரலாற்றில் குறிக்கப்படும் அளககோனார் களில் முதன்மையானவர். இவரையே இப்னு பதூதா குருணாகலையில் சந்தித்ததாகக் குறிப்பிடுகிறார். அளக கோனார் பற்றிய இப்னு பதூதாவின் கருத்து இங்கே ஆழ்ந்து கவனிக்கத்தக்கதாகும். 'கோநகர்' என்ற இடத் தில் 'அல்கோனார்' என்பவரின் அரசு இருந்ததாகவும் வெள்ளை யானை முதலிய அரச சின்னங்களை அவர் வைத்திருந்ததாகவும் குறிப்பிடும் இப்னு பதூதா, அவ ரது பிரதானிகள் கலகம் செய்து கண்களைப் பிடுங்கி விட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதாகக் குறிப் பிடுகிறார். நாம் ஏற்கனவே குறித்துக் காட்டிய வர லாற்று ஆய்வாளர்களான C.E. குரே, எட்வட் பெராரா ஆகியோர் இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றனர். இலங் கையின் பிற்கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்த அளககோனார்கள் இவரது வம்சத்தில் வந்தவர் களே எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும், அவர்கள் அனைவரும் முஸ்லிம்களாக வாழ்ந்தார்கள் எனக் கொள்ள வேண்டியதில்லை என்றும் எழுது கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்


வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.

1.




i. ii. iii.

2.



i. ii. iii.

பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம்.




A B C D E F

3. கட்டங்களை சரியாகக் காட்டும் விடையை தெரிவு செய்க.

i. ABD, CEF ii. BCF, ADE iii. DEF, CBA


அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.

4.




i. ii. iii.

5.



i. ii. iii.

கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. ஞாயிறு, செவ்வாய், புதன், வெள்ளி, சனி, ..........

i. ஞாயிறு ii. திங்கள் iii. செவ்வாய்

7. டிசம்பர், மார்ச், ஏப்ரல், ஜூலை, செப்டெம்பர், ..........

i. டிசம்பர் ii. ஜனவரி iii. பெப்ரவரி

8. ரமணி ஒரு மணித்தியாலத்தில் 20 பூக்கள் செய்வாள் அமலா 15 நிமிடத்தில் 6 பூக்கள் செய்வாள். 3 மணித்தியாலங்களின் பின் அக்காவை விட தங்கை எத்தனை பூக்கள் கூடுதலாக செய்திருப்பாள்?

i. 08 ii. 20 iii. 24

வெற்றிடங்களைச் சரியாக நிரப்புக.

| | பொருட்கள் | 1 Kg | 750 g | 250 g |
|---|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| 9,10. | வெங்காயம் | .......... | 112.50 | .......... |
| 11,12. | கடலை | .......... | .......... | 39.50 |
| 13,14. | பருப்பு | 90.00 | .......... | .......... |

குமார் 4 ரூபாய், 10 ரூபாய் முத்திரைகள் வாங்குவதற்கு 100 ரூபா தாள் காசு ஒன்று கொடுத்து இரு வகையான முத்திரைகளை மீதிப் பணமின்றி வாங்கினான் எனின்,


15. அவன் வாங்கிய 4 ரூபாய் முத்திரைகள் எத்தனை?

i. 5 ii. 10 iii. 20

16 அவன் வாங்கிய 10 ரூபாய் முத்திரைகள் எத்தனை?

i. 7 ii. 5 iii. 6

17. செங்கற்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சுவர் ஒன்றின் ஒரு பகுதி காணப்படுகிறது. இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்களின் எண்ணிக்கை.



i. 10
ii. 12
iii. 15

18. குமாரினதும் அஜித்தினதும் நிறையின் கூட்டுத்தொகை 60 Kg ஆகும். அஜித்தினதும் ரவினதும் நிறையின் கூட்டுத்தொகை 68 Kg ஆகும். மூவரினதும் நிறையின் கூட்டுத்தொகை 100 Kg ஆகும். இதற்கமைய, ரவியின் நிறை எவ்வளவு?

i. 30 Kg ii. 32 Kg iii. 45 Kg

19. அஜித்தினதும் ரவியினதும் நிறை எவ்வளவு?

i. 68 Kg ii. 78 Kg iii. 60 Kg

20.



21.




22.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.


23. 







i. 60 ii. 33 iii. 18

24. 






i. 16 ii. 24 iii. 32

25. உரோம இலக்கத்தில் எழுதுக.

பத்தொன்பது : .............



பதினான்கு : ..............




வித்தியாசமான படத்திற்கு கோடிடுக.

26. 
i.

ii.

iii.

27. 
i.

ii.

iii.

28. 
i.

ii.

iii.

பிழையான வாக்கியங்களுக்குக் கோடிடுக.

29. i. சேறுழுத்து உவர்நீர் கட்டி நெல் விளைவித்தான்.
ii. களிமண் பதப்படுத்தி மட்பாண்டங்கள் செய் தான்.
iii. கம்மாலையில் நெருப்பு வளர்த்து வாள் செய் தான்.

30. i. கமலன் அன்னையையும் பிதாவையும் வாழ்த்தி வணங்கினான்.
ii. மாணாக்கனும் மனைவியும் கல்வியில் ஆர் வம் காட்டினர்.
iii. நடிகனும் நடிகையும் ஆடிப்பாடினர்.

31. பெயர் அடைமொழி உள்ள வாக்கியத்திற்கு கோடி டுக.
i. எருது வயலை உழுதது.
ii. சிங்கம் மானை பாய்ந்து பிடித்தது.
iii. புலி வரிக்குதிரையை துரத்தியது.

32. எழுவாய் அடைமொழி உள்ள வாக்கியத்திற்கு கோடிடுக.
i. கொடிய சிங்கத்தை நரி ஏமாற்றியது.
ii. பெரிய பானைக்குள் சிறிய எலி பாய்ந்தது.
iii. கமலன் இனிமையாக பாடினான்

33. மிகச் சரியான வாக்கியத்திற்கு கோடிடுக.
i. மாரி காலத்தில் மழை பொழியும்.
ii. சூரியன் மேற்கில் மட்டும் உதிக்கும்.
iii. கல்யாண வீட்டில் ஒப்பாரி வைக்கப்படும்.

34. i. பூனை - சீறும்
ii. குரங்கு - அழும்
iii. எருமை - கதறும்

35. i. நல்வழி, காற்று, கலாசாலை
ii. நள்வழி, காற்று, களாசாளை
iii. நல்வளி, காற்று, கழாசாலை

36. இணைமொழிச் சொல் ஒன்று
i. கடகட
ii. மேலே மேலே
iii. முட்டி மோதி

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

நீர் நிலையில் ஒரு கொக்கு அசைவின்றி அடக்க மாக நிற்கிறது. சிறிய மீன்கள் அங்குமிங்கும் ஓடித் திரிகின்றன. இதை அவதானித்து பெரிய மீன் ஒன்று அவ்விடத்திற்கு வந்ததுமே கொக்கு உடனே அந்த மீனைக் கொத்தியெடுத்து இரையாக்கிக் கொள்ளும். அது போலவே அடக்கமாக இருப்பவர்கள் அறிவு இல் லாதவர் என்று எண்ணிவிட வேண்டாம். அவர்கள் தக்க சமயத்தில் தமது காரியத்தை நிறைவேற்றிவிடுவர்.

37. இப்பந்தியிலே வந்துள்ள ஒரு பறவை?
i. கிளி ii. கொக்கு iii. மீன்

38. பந்தியிலே காணப்படுகின்ற கடல் வாழ் உயிரி னம் ஒன்று?
i. மீன் ii. கொக்கு iii. கப்பல்

39. கொக்கு நீர் நிலையில் நின்றதற்கான காரணம்?
i. குளிப்பதற்கு
ii. தண்ணீர் அருந்துவதற்கு
iii. பெரிய மீனை பிடிப்பதற்கு

40. பந்தியில் இடம்பெற்ற அடக்கமானவர்கள் என்பது?
i. அறிவில்லாதவர்கள் ii. அறிவுள்ளவர்கள்
iii. மடையர்கள்

44 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பின்வரும் பந்தியை வாசித்து பந்தியில் காணப்படும் உயிர் எழுத்துச் சொற்கள் ஐந்தினை எழுதுக?**

ஒரு காட்டில் வேடன் ஒருவன் வாழ்ந்தான். அவன் முயல், ஆடு, ஆமை, மான்குட்டி போன்றவற்றை வளர்த்து வந்தான். அவன் உயிர்களிடத்தில் சிறிது அன்பு வைத்திருந்தான். இருந்தாலும், மிருகங்களை வேட்டையாடி உண்பதை விட்டு விடவில்லை. அக்காட்டில் சிறுத்தை, புலி, கரடி போன்றவை அதிகம் வாழ்ந்து வந்ததால் அவற்றுக்கு அஞ்சிய அவன் தன்னுடைய இருப்பிடத்தை விட்டு அதிக தூரம் போவதில்லை.

ஒரு நாள் அவனுடைய இருப்பிடம் நாடி வந்த மதம் பிடித்த யானையிடம் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தான்.

1. ...................... 2. ......................

3. ...................... 4. ......................

5. ......................

**பந்தியில் இடம்பெற்ற மாமிச உண்ணிகள் தவிர்ந்த ஏனைய விலங்குகள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக?**

6. ...................... 7. ......................

8. மதம் பிடித்த யானை என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

9. பின்வரும் தொகுதிகளுள் கொடிய மிருகங்களின் தொகுதி
   i. முயல், ஆடு, யானை
   ii. ஆடு, முயல், மான்குட்டி
   iii. கரடி, சிறுத்தை, புலி

10. அவன் இருப்பிடத்தை விட்டு அதிக தூரம் போவதில்லை என்பதற்கு சமமான ஒரு கூற்று?
   i. காடு முழுதும் சுற்றி வருவது
   ii. அவன் வீட்டிலேயே வாழ்வது
   iii. குறிப்பிட்ட எல்லைக்குள் மாத்திரம் சென்று வருவது


**பின்வரும் ஆங்கில வாக்கியங்களுக்கு பொருத்தமான கருத்தை எழுதுக?**


11. HOW MANY BALLS ....................................


12. FOUR PENS ....................................

**பின்வரும் படத்தை அவதானித்து மிகப் பொருத்தமான விடைக்குக் கோடிடுக.**

13. 
   i. கிளி கூட்டில் வாழும் பறவை.
   ii. தங்கக் கூண்டை பார்க்கிலும் கிளிக்கு சுதந்திரமே அதிக விருப்பமானது.
   iii. தங்கக் கூண்டில் அடைக்கப்பட்டால் கிளி குதூகலம் அடையும்.

14. 
   i. பற்றூரிகை பற்களைத் தீட்டுவதற்கு உகந்ததல்ல.
   ii. பற்றூரிகையினால் பற்களை மேலும் கீழும் தீட்ட வேண்டும்.
   iii. விரல்களால் பற்களை துலக்குவதே அதிகம் சிறந்தது.

15. 
   i. இது ஏழைகளின் அப்பிள் எனப்படும்.
   ii. வாழைப்பழம் தானிய வகையைச் சார்ந்தது.
   iii. வாழையில் ஓரினமே காணப்படுகிறது.

16. 
   i. இலங்கையில் மட்டுமே இதன் சேவையைப் பெறலாம்.
   ii. இதன் சேவையைப் பெற அதிக பணத்தை செலவிட வேண்டும்.
   iii. செய்திப் பரிமாற்றத்தை பாதுகாப்பாகப் பேணலாம்.

17. கீழே சில வாக்கியங்கள் குழம்பியுள்ளன. அதனை ஒழுங்குபடுத்த வரும் இலக்கங்களை கட்டத்தினுள் எழுதுக.

1. வியாபாரிகள் பயிர்களைக் கொள்வனவு செய்ய அவனது இடத்திற்கு வந்தபோது அவனது சந்தோஷம் பன்மடங்காகியது. ☐
2. பயிர்களை அறுவடை செய்யும்போது ஆனந்தன் ஆனந்தமாகவே காணப்பட்டான். ☐
3. எதிர்பார்த்த இலாபம் கிடைக்காததால் ஆனந்தன் சோகத்தில் ஆழ்ந்தான். ☐
4. அவை மூடைகளாகக் கட்டப்படும் போதும் அவனது முகம் மிகவும் பிரகாசமாகவே காணப்பட்டது. ☐
5. ஆனால், பேரம் பேசும் நடவடிக்கையின்போது அவனது உள்ளம் படபடத்தது. ☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. நள்ளிரவில் பூக்கும் பூ எது?
i. தாமரை ii. சூரியகாந்தி
iii. தாழம் பூ iv. ரோசா

19. நிழல் தரும் மரம் எது?
i. பப்பாசி ii. நெல்லி
iii. கமுகு iv. வேம்பு

20. திரள் பழம் என்பதைக் குறிக்கும் பழம் எது?
i. முள் அன்னா முன்னா
ii. பலாப்பழம் iii. திராட்சை

21. இலங்கைக்கே உரித்தான பறவையினம் எது?
i. மைனா ii. புளுனி
iii. மீன்கொத்தி iv. கிளி

22. காலில் குளம்புகள் உள்ள பிராணிகள் எவை?
i. குதிரை, ஒட்டகம் ii. ஆடு, மாடு
iii. ஒட்டகம், மாடு

23. தும்புகளைப் பயன்படுத்தி கூடுகளைக் கட்டுவது எது?
i. முயல் ii. தூக்கணாங்குருவி
iii. மைனா iv. அணில்

24. நிலக் கடலையில் அதிகளவில் காணப்படும் போசணைப் பொருள் எது?
i. புரதம் ii. இலிப்பிட்டு
iii. கொழுப்பு iv. காபோவைதரேற்று

25. விவசாயி பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள் மாத்திரம் கொண்ட தொகுதி எது?
i. மண்வெட்டி, சீவுளி, மணியாசு
ii. குப்பைவாரி, மண்வெட்டி, மண்கிண்டி
iii. கோடரி, கலப்பை, மண்வெட்டி

26. கழிச்சல், டெங்கு, கொள்ளை நோய், விசர் நாய்க் கடி ஆகிய நோய்கள் பரவுவது முறையே,
i. ஈயின் மூலம், நுளம்பின் மூலம், கரப்பான் மூலம், நாயின் மூலம்
ii. நுளம்பின் மூலம், நாயின் மூலம், கரப்பான் மூலம், குரங்கின் மூலம்
iii. ஈயின் மூலம், நுளம்பின் மூலம், எலியின் மூலம், நாயின் மூலம்

27. அசுத்த நீரினைப் பருகுவதால் ஏற்படக் கூடிய நோய்கள் எவை?
i. வாந்திபேதி, மஞ்சட் காய்ச்சல்
ii. நெருப்புக் காய்ச்சல், கண்டமாலை
iii. மஞ்சட் காய்ச்சல், மலேரியா

28. எமது நாட்டினுள்ளே பதிவுத் தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி
i. ரூபா 25.00 ii. ரூபா 35.00
iii. ரூபா 20.00 iv. ரூபா 10.00

29. தேசப்படத்தில் புகையிரதப் பாதைகள், கடல்கள், பெருந்தெருக்கள் ஆகியவற்றை காட்டுவதற்குப் பயன்படுத்தும் நியம நிறங்கள் முறையே,
i. கறுப்பு, கருநீலம், சிவப்பு
ii. சிவப்பு, கபில நிறம், கருநீலம்
iii. மஞ்சள், கபில நிறம், பச்சை

30. இலங்கையின் ஒரே மாகாணத்திலிருந்து மீஓயா, தெதுரு ஓயா ஆகிய இரு ஆறுகளும் கடலுக்குள்ளே பாய்கின்ற மாகாணம் எது?
i. மேல் மாகாணம் ii. வட மேல் மாகாணம்
iii. தென் மாகாணம்

31. உடலின் சக்தி கூடுதலாக விரயமாகும் விளையாட்டு எது?
i. கயிறு இழுத்தல் ii. கரம் iii. சதுரங்கம்

32. பச்சை நிறத்தைப் பெற கலக்கக் கூடிய நிறங்கள் எவை?
i. நீலமும் சிவப்பும் ii. சிவப்பும் மஞ்சளும்
iii. மஞ்சளும் நீலமும்

33. மின்னேரியாக் குளம், அபயவாவி, திஸ்ஸவாவி ஆகிய குளங்களைக் கட்டுவித்த அரசர்கள் முறையே,
i. மகாசேனன், பண்டுகாபயன், தேவநம்பிய தீசன்
ii. பண்டுகாபயன், மகாசேனன், தேவநம்பிய தீசன்
iii. தேவநம்பிய தீசன், பண்டுகாபயன், மகாசேனன்

34. மத்தள விமான நிலையம் அமைந்துள்ள மாகாணம் எது?
i. வட மாகாணம்
ii. தென் மாகாணம்
iii. மேல் மாகாணம்

35. கடற்கரைக்கு அண்மித்த பிரதேசம் எது?
i. மாத்தளை ii. மாத்தறை iii. பதுளை

36. காற்பந்தாட்டப் போட்டியொன்றில் ஒரு குழுவில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை?
i. 10 ii. 11 iii. 6

37. மிளகாய் பூவின் நிறம் யாது?
i. ஊதா ii. மஞ்சள் iii. வெள்ளை

38. வட்டுக் கத்தரிப் பூவின் நிறம் யாது?
i. நீலம் ii. சிவப்பு iii. ஊதா

39. தென்னை மரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பிராணி எது?
i. கருவண்டு ii. எலி
iii. கரையான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. இலக்கங்களில் எழுதுக?

பத்தொன்பதாயிரத்து இருநூற்று இருபத்தாறு ....................

எண்கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக?

41. 3040, 3030, 3020, 3010, ........., ...........

42. 2196, 2197, 2198, 2199, ........., ...........

43. 12 லீற்றர் பாலில் 300 மில்லி லீற்றர் வீதம் 12 தடவைகள் எடுத்தால் மிகுதியாக இருக்கும் பாலின் அளவு யாது?

44. குவியல் ஒன்றில் 450 தோடம்பழங்கள் உள்ளன. இதில் 5/9 பங்கு பழங்கள் விற்கப்பட்டன. எஞ்சிய தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

45. வியாபாரி ஒருவன் 10 kg அரிசியில் 5 kg 50 g அரிசி விற்றான். மிகுதியாக இருக்கும் அரிசியின் நிறை யாது?

46. ரவி 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி பிறந்தான். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அவனுடைய வயது யாது?

47. மோட்டார் சைக்கிள் A யில் இருந்து காலை 11.00 மணிக்கு புறப்பட்டு மணிக்கு 60 km என்ற வேகத்தில் B ஐ நோக்கி செல்கிறது. அது B ஐ அடையும் போது நேரம் பகல் 15 மணி ஆகும். மோட்டார் சைக்கிள் பயணித்த தூரம் யாது?

48. 20 cm நீளமான சதுர அட்டை ஒன்றிலிருந்து 5 cm நீளமான எத்தனை சதுரங்களை வெட்டி எடுக்கலாம்?

**விடைகள்**

1. அவன்
2. ஆமை
3. உயிர்களிடத்தில்
4. அன்பு
5. உண்பதை
6. முயல்
7. மான்
8. பைத்தியம் பிடித்த யானை
9. iii
10. iii
11. எத்தனை பந்துகள்
12. நான்கு பேனைகள்
13. ii
14. ii
15. i
16. iii
17. 4, 1, 5, 2, 3
18. iii
19. iv
20. i
21. ii
22. iii
23. ii
24. ii
25. ii
26. iii
27. i
28. ii
29. ii
30. ii
31. i
32. iii
33. i
34. ii
35. ii
36. ii
37. iii
38. iii
39. i
40. 19220
41. 3000, 2990
42. 2200, 2201
43. 8400 ml
44 200
45. 4 kg 950 g
46. 12 வருடம் 09 மாதம் 27 நாள்
47. 135 kg
48. 16 துண்டுகள்

---

**41 ஆம் பக்கத் தொடர்...**

41. மேற்கூறப்பட்ட பந்திக்குப் பொருத்தமான பாடல் வரி?

i. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

ii. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி யோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்

iii. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே

**விடைகள்**

1. iii
2. iii
3. ii
4. ii
5. ii
6. ii
7. i
8. i
9. 150.00
10. 37.50
11. 158.00
12. 118.50
13. 45.00
14. 22.50
15. ii
16. iii
17. ii
18. ii
19. i
20. ஆனந்த குமாரசாமி
21. ஆதர்சி கிளாக்
22. வீர கெப்பட்டிபொல திசாவ
23. ii
24. i
25. xix, xiv
26. ii
27. i
28. iii
29. i
30. ii
31. iii
32. ii
33. i
34. i
35. i
36. iii
37. ii
38. i
39. iii
40. ii
41. i




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 11

## தலைப்பு: நோன்புப் பெருநாள்

### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



இஸட்.எச்.எம். லுக்மான்
ஸாஹிரா தேசிய பாடசாலை
மாத்தளை




ஆயிஷா முனவ்வரா ரசீன்
ஜாமிஆ ஆயிஷா சித்தீக்கா



எம்.எல்.எம் மிஸ்பாக்
மூதூர்

### பாராட்டை பெறும் சித்திரங்கள்



எம்.என்.எம். இக்ராம்
அபுக்காகம மொன்னேகுளம்




சப்னா நிஸவ்வர்
பெலந்த மு.வி.
அகலவத்த



என். நுஸ்ரி அஹமட்
அபுக்காகம
மொன்னங்குளம்




எம்.எல்.எப். ஸம்ஹா
மா/அமினா பெ.தே.பா.
மாத்தளை



எம்.வை. உஸ்னா
வேப்பமடு மு.ம.வி.
புத்தளம்



எம்.ஜ.எம். இஜாஸ்
அல் அஸ்ரக் மு.வி.
மாவத்தகம



எம்.ஐ.எம். ஹிபா
அம்பத்தன்ன



சல்மா நஸீம்
மர்/ஆமினா ம.வி.
மாத்தளை



ஏ.எம். ஹாபிழா
கா/உஸ்வதுன் ஹஸனா ம.வி.
காலி



எம்.எப். ஹயாம்
அம்பத்தன்ன



எம்.எஸ்.எப். அமீனா
ஹபுகஸ்தலாவ



ஏ.கே. புஷ்ரா
அக்குரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

## ரமழான் விசேட வெகுமதி

**பரிசுக் கூப்பன் (Gift Voucher) மற்றும் பரிசுப் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்**



அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்

ஒரே கூரையின் கீழ்

தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...

- புனித அல்குர்ஆன்
- அகராதிகள்
- உளவியல்
- தர்ஜமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாம்
- அல் ஹதீஸ்
- வரலாறு
- இலக்கியம்
- இலக்கணம்
- கவிதை
- பாடசாலை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/ DVD







**தினமும் காலை 8.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்...**

வெளியீடு மொத்த விற்பனைப் பகுதி:
0115 736098, 0772518641

தபால் மூலம் நூல்களைப் பெற:
011 2684851

புனித அல்குர்ஆன் பிரதிகளை
மொத்தமாகப் பெற: 0773171725

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks எனType செய்து
40404க்கு அனுப்புங்கள்.






77, தெமடகொட வீதி,
கொழும்பு-9

**HOTLINE:**
**0115 925 935**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org